# செம்பதாகை

மலர்: 5
இதழ்: 7
1983 ஆடி
விலை ரூபா 1-00
புரட்சிகர வெகுஜன ஏடு


# திருகோணமலைச் சம்பவங்களுக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும்!

**திருகோணமலையில் ஒரு மாதகாலமாக மிகக் கொடூரமான முறையில் இனவாத வெறியாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. வன்செயல்களைத் தடுப்பதற்காகவே அவசரகாலச் சட்டத்தைக் கொண்டுவந்ததாகக் கூறிவரும் ஒரு அரசாங்கத்தினால் நாட்டின் ஒருபகுதியில் நடாத்தப்பட்ட இனவாத வன்செயல்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. எனவே திருமலைச் சம்பவங்களுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.**

கடந்த யூன் மாதம் மூன்றும் திகதி திருகோணமலையில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறியாட்டம் ஒரு மாதகாலமாக நடாத்தப்பட்டுள்ளது. இச் சம்பவங்களை இனக்கலவரங்கள் என்று கொள்ளமுடியாது. திட்டமிட்ட இனக் கொலையா? என்ற சந்தேகத்தை கிளப்பும் வகையிலேயே சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அந்தளவு நிலைக்கு அப்பகுதித் தமிழ் மக்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர். இத் தலைப்பு எழுதும்வரை பதினெட்டுத் தமிழர்கள் மிகமிகக் காட்டுமிராண்டித்தனமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இருநூறு வீடுகள் நாசமாக்கப்பட்டுள்ளன. அவர்களது உடமைகள் எரிக்கப்பட்டுள்ளன. கடைகள் பல கொள்ளைக்கும், தீயிடலுக்கும் இரையாகிவிட்டன. பலர் படுகாயங்களுக்கு ஆளாகியுள்ளனர். புராதனக் காலக் கோவில்களும், கலைச் சின்னங்களும் கூட தகர்க்கப்பட்டு சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளன. ஆயிரத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாகி இருக்கின்றனர். தமது சொந்தப் பிரதேசத்திலேயே என்றுமில்லாத பயப்பீதியுடன் தமிழர் வாழநிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

இச் சம்பவங்களைச் செய்தவர்கள் யாராக இருக்கமுடியும். நிச்சயமாகச் சாதாரண சிங்கள மக்களாக இருக்க முடியாது. திட்டமிட்டுத் தீனி போட்டு வளர்க்கப்பட்ட ஒரு இனவெறிக் குண்டர் கூட்டமே இவ் அநாகரீகச் செயல்களைச் செய்தவர்கள்.

முழ்கடிப்பதன் மூலம் பெரும்பான்மை இனம் எவ்விதப் பெருமைகளையும் நிலைநாட்டிக் கொள்ள முடியாது என்பதை நிச்சயம் ஏகப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளவே செய்வர். இனத்தின் பெயரால் இவ் இனவெறிக் குண்டர்கள் ஆடும் இனவெறியாட்டம் ஆளும் வர்க்கத்தின் அதிகார நீடிப்புக்கும், அதன் அரசியல் பொருளாதாரத் தோல்விகளை மூடிமறைத்து மக்களைத் திசை திருப்பவும் மட்டுமே உதவவக் கூடியது.

## ஊரடங்குச் சட்ட நேரத்தில் தீவைப்பு-கொலைகொள்ளைகள் எவ்வாறு இடம்பெற்றன?

இக் குண்டர் கூட்டத்தின் கொடூரமான இரத்த வெறியாட்டத்தினால் தமதுமதம் கலை கலாச்சாரம் என்று பெருமையடையக்கூடிய ஒவ்வொரு சிங்கள மனிதனும் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஒரு சிறுபான்மை இனத்தை இரத்தவெள்ளத்தில்

இப்பொழுது திருகோணமலையில் அட்டகாசம் புரிந்த இக் குண்டர் படை ஏற்கனவே ஒவ்வொரு பிற்போக்குச் சம்பவங்களின் போதும் தன் வெறியாட்டத்தை வெளிகாட்டியுள்ளதை மக்கள் நன்கு இனம் கண்டுள்ளனர். ஏற்கனவே இடம் பெற்ற இனக்கலவரங்களிலும், 80ம் ஆண்டு வேலை நிறுத்தத்திலும், 81ல் யாழ்ப்பாணம் கோரமாக எரிக்கப்பட்டபோதும், தேர்தல் கால வன்முறைகள் பலவற்றிலும் இக் குண்டர் படை தனது கொடூரச்செயல்களை குறைவிலாது நடத்தி வந்துள்ளது. ஆனால் இக் குண்டர் கூட்டத்தை தட்டிக் கேட்க முடியாத நிலை உருவாகியுள்ளது. யார் தட்டிக் கேட்க உரிமையுடையவர்களோ அவர்களாலேயே ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இப்படை இருக்கும் போது ஏனையவர்கள் என்ன செய்ய முடியும். தங்களை அதி உத்தமர்களாகவும், ரட்சகர்களாகவும் காட்டிக் கொள்ளும் ஆட்சியின் தலைவர்கள் திருகோணமலைச் சம்பவங்கள் பற்றி இது வரை பொறுப்புள்ள எந்த ஒரு வார்த்தையைத்தானும் பேசவில்லை. இது எதைக்காட்டுகிறது? எல்லாவற்றுக்குமான வட்டி குட்டியோடு இந்நாட்டு மக்கள் இவர்களைத் தட்டிக்கேட்கும் நாள் வரவே செய்யும் என்பதில் எமக்கு நம்பிக்கைஉண்டு.

திருகோணமலையில் இக் குண்டர்படையின் இனவெறியாட்டம் அவசரகாலச் சட்டத்தின்

(8-ம் பக்கம் பார்க்க)

## தோழர் செந்தில் பொலிஸ் விசாரணையில்!

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) வட பிரதேசச் செயலாளர் தோழர் கே. செந்திவேல் 5-7-83ல் விசாரணைக்காகப் பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டார். விசாரணையின் பின் அவரிடம் இருந்து வாக்கு மூலம் பெறப்பட்டு மறுநாள் விடுதலை செய்யப்பட்டார்.

# தமிழர் பிரச்சினையைத் தீர்க்க சகல கட்சிகளையும் கூட்டுக!

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ஜனாதிபதிக்கு கடிதம்

ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதன் மூலம் ஏற்படும் மரணங்களுக்கு சட்ட ரீதியான மரணவிசாரணை எதுவும் தேவை இல்லை என்ற விதியும், அவ்வாறான துப்பாக்கிப் பிரயோகத்தினால் மரணமடைந்தவர்களின் சடலங்களை பொலீஸ் விரும்பியபடி தகனம் செய்யவுமான விதியும் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது ஏற்கனவே பாரபட்சமான முறையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நிரந்தரப் பீதியுடன் வாழும் தமிழ் மக்களுக்கு மேலும் பயத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒரு பகுதி மக்களுக்கு எதிராக இவ்வாறான விதிகளையோ, ராணுவ நடவடிக்கைகளையோ கொண்டுவருவதன் மூலம் அரசியல் தன்மை வாய்ந்த இப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதைக் கடந்தகால அனுபவங்கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. அதற்குமாறாக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மிகக்கவனமாக ஆராயப்பட்டு அதற்கான அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும். இதுவே இன்றைய நிலையில் பதட்ட நிலையை தணிக்க உதவிகரமாக அமையக் கூடிய தொன்றாகும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தேசிய அமைப்புக் கமிட்டியின் சார்பில் அதன் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது; அரசாங்கத்திற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் எந்தவித ஆக்கபூர்வமான பெறு பேறுகளையும் கொடுக்கவில்லை. எனவே அரசாங்கம் தனது தேர்தல் கால வாக்குறுதிகளில் கூறியது போல் சகல அரசியல் கட்சிகளையும் அழைத்து தமிழர் பிரச்சினை பற்றி ஆராயவும், முடிவுகள் மேற்கொள்ளவும் முன்வரவேண்டும். இது பிரச்சினையை குறைந்தபட்சமாவது தீர்த்து வைக்க எடுக்கப்படும் முதல் முயற்சியாக அமையும் என எமது கட்சி கருதுகின்றது.

எனவே சகல ராணுவ நடவடிக்கைகளையும், பயங்கரவாதத் தடைச்சட்டம் உட்பட அண்மையில் அமுலுக்கு கொண்டுவந்த விஷேட விதிகள் சகலதையும் வாபஸ் பெற்று தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு அரசியல் தீர்வு காணும் பொருட்டு சகல அரசியல் கட்சிகளையும் தேசபக்த பிரமுகர்களையும், பொது ஸ்தாபனங்களையும் ஒரு மாநாட்டிற்கு அழைக்கவேண்டும் என எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வேண்டுகோள் விடுகின்றது. இவ்வாறு அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## தடையும் - தடுப்புக்காவலும் கண்டிக்கப்பட வேண்டியன!

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'சுதந்திரன்', 'சற்றடே றிவியூ' ஆகிய இருபத்திரிகைகளையும் அரசு தடை செய்து அவற்றின் காரியாலயங்களையும் மூடிச் சீல் வைத்துள்ளது. அதேவேளை தமிழ் ஈழ விடுதலை அணியின் தலைவர்களான டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், கோவை மகேசன் ஆகிய இருவரும் கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவங்களை நாம் விசனத்துடன் கண்டிக்கின்றோம்.

சுதந்திரன் பத்திரிகை வெளியிடும் கருத்துக்கள், கட்டுரைகள் பற்றி துளியளவும் எமக்கு உடன்பாடு கிடையாது. அதேபோல் டாக்டர் தருமலிங்கம், கோவை மகேசன் ஆகியோரின் கொள்கைகளுக்கும், அரசியல் கருத்துகளுக்கும் எமக்கும் எந்த அடிப்படையிலும் ஒற்றுமை கிடையாது.

அதேவேளை சுதந்திரன் தடைசெய்யப்படவும், அவ்விருவரும் தடுப்புக் காவலில் வைக்கப்படவும் அரசு கூறும் காரணங்களை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசு கூறும் காரணங்கள் நேர்மையான ஒரு அளவுகோலாக இருந்தால், அது பார

(8ம் பக்கம் பார்க்க)

# சம்பவங்களும் அதன் போக்குகளும்

⁂ அவதானி ⁂

## நீதியே நீகேள்

மறுபடியும் நீதிமன்றத்தால் குற்றம் காணப்பட்ட சம்பவத்தில் ஒரு பொலிஸ் அதிகாரிக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. விவியன் குணவர்த்தன சர்வதேச மாதர் தினத்தில் பொலிசாரால் நடத்தப்பட்ட முறைபற்றிய வழக்கில் அரசாங்கத் தரப்பில் அவருக்கு நட்டஈடு வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நீதிமன்றம் கண்டித்தது. அதையொட்டி பொலிஸ் அதிகாரிகள் மீது 'உரிய நடவடிக்கை' எடுககப்பட்டுள்ளது. நம் நிர்வாகம் சிவப்புநாடா, காலதாமதம் அசிரத்தை என்று பல குறைபாடுகளையுடையது என்று யார் ஒய் சொனஞர்கள்?

போன தடவை இம்மாதிரி அரசாங்கம் நடந்துகொண்டபோது ஆளுங்கட்சிக்குண்டர்கள் அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளத் தவறி விட்டார்கள். இம்முறை பரவாயில்லை. மூன்று நீதிபதிகள் வீடுகளின் முன்னல் சட்டத்திற்குத் தாங்கள் காட்டும்மரியாதையைக் காட்டிக் கொண்டார்கள். போக்குவரத்துச்சபை பஸ்கள் இரண்டு தனியார் மினிபஸ் ஒன்று இவையெல்லாம் எப்படி அங்கே போய்ச் சேர்ந்தன? பொலிசார் அழைக்கப்பட்டபோது அவர்கள் யாருமே அசையாமை எல்லாமே தற்செயலான காரியங்களா? யாராவது பொலிஸ் அதிகாரி குண்டர்கட்கு எதிராக நடவடிக்கை எடுக்க முனைந்திருந்தால் அவர் ஒரு வேளை பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கலாமோ என்னவோ!

சென்ற இடைத்தேர்தல்களின் போது உபாலி விஜேவர்த்தனவின் வாக்கும் சர்வசன வாக்கெடுப்பின்போது கொப்பேகடுவையின் வாக்கும் ஆள்மாருட்ட மோசடிக்காரர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது ஏதோ அந்த ஓரிரு வாக்குகள் மூலம் வெற்றி பெறலாம் என்ற நோக்கில் அல்ல. மாருக, நாம் இதைக்கூடச்செய்வோம், தட்டிக்கேட்க யாருமில்லை என்று ஆளும்கட்சியினர் செய்த பிரகடனமே அந்தச் செயல்கள். கூச்சமின்றிப் பட்டப்பகலில் பகிரங்கமாக ஆளும் கட்சியினரின் வன்முறைச்செயல்கள் நடக்கின்றன. நம்மை அசைக்கப் பொலிசாலும் முடியாது என்று காட்டிவிட்டார்கள். அப்படிப் பொலிஸை மீறி ஏதும் செய்தாலும் நீதிமன்றத்தாலும் முடியாது என்று காட்ட முனைகிருர்கள். இந்தப்பிற்போக்குக் குண்டர்படையால் உணர முடியாதது ஒருநாள் 'மக்களால் முடியும்' என்பதே.

★

> **இன உறவுகள் பற்றி**
> **— இமயவரம்பன் —**
> அடுத்த இதழில் எழுதுகிருர்

## பல்கலைக்கழக விசாரணைகள்

போன டிஸெம்பர் மாதம் யூ. என். பி. — ஜே. வி. பி. மோதல பற்றிய அறிக்கை அண்மையில் வந்தது. அது அவசர அவசரமாக விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக ஜே. வி. பி. யினா சிலர் தண்டனைக்குள்ளாகலாம் என்ருல் அதை எதிர்த்து மாணவர் மத்தியில் ஆட்சேபனைகள் எழ இடமுண்டு. அதையும் வளாக இனக் கலவரம் பற்றிய விசாரணையும் குழப்பியடித்தல் மூலம் சில இன வாதிகளைக் காப்பாற்ற முடியுமென்ற எதிர்பார்ப்புகள் உள்ளன சில ஜே. வி. பி. யினர் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள தமிழ் மாணவர்களை அரசியல் பகடைகளாகப்பயன்படுத்தும் வாய்ப்பும் உள்ளது. அவ்வாறு பயன்பட்டுத் தமிழ்மாணவர்கள் ஜே. வி. பி. யினர் மீது தண்டனையை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்தால் அதையே சாட்டாக்கி யூ. என். பி. யினர் தம் மாணவக் குண்டர்களைக் காக்க முனையலாம் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களிடையேயுள்ள ஜே. வி. பி, யூ. என். பி. சாராத இனத் துவேஷமற்ற முற்போக்கு சக்திகளுடன் ஒன்றிணைவது பற்றிச் சிந்திப்பது பொருத்தமானது.

★

## கப்பல் பார்த்த தமிழன்

தமிழர் இன்னல் துடைக்கக் களம்வந்த தளபதியார் இன்று கப்பல்களைப் பார்வையிட வருகிருர். பராக்......

இரண்டு மூன்று மாதம் முன்பு அமெரிக்கக்கப்பல். அமெரிக்க தாஸன் என்று மக்கள் உறுதிப் படுத்திக் கொள்வார்கள் என்ருே என்னவோ சமீபத்தில் ரஷ்சியக் கப்பல். தளபதியார் கப்பல் தலைவருடன் கைகுலுக்கும் படங்கள் செய்திகள் — இவற்றைவிட முக்கியமான விஷயம் உண்டா தமிழனுக்கு? இதைவிட உருப்படியான காரியம் உண்டா தமிழர் தானைத் தலைவருக்கு?

★

## இனக் கலவரமும் அரசும்

திருகோணமலையில் 1958 இனக்கலவரத்தின்போது பூரண அமைதி நிலவியது. ஆனல் 1977 தேர்தலின் பின் அங்கு இனவாத வன்முறை அதிகரித்துள்ளது. சமீபகால வன்முறைகள்-தீவைப்பு, கொலை கொள்ளை எல்லாமே ஊரடங்குச் சட்ட நேரங்களுக்குள்ளேயே பெரும்பாலும் நிகழ்வது சிந்தனைக்குரிய விஷயம்.

குருநாகல் இன்று ஒரு பயங்கரமான இடமாகக் கருதப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. பட்டப்பகலில் நடக்கும் வன்முறைகளை அரசால் தடுத்து நிறுத்த முடியாதா? ஸ்ரீ.ல.சு.க. ஆட்சியில் முக்கியமாக 1970-77 காலத்தில் எவ்வாறு இனவாதச் சம்பவங்கள் பரவாமல் தடுக்கப்பட்டமைக்கு காரணம் என்ன? ஸ்ரீ. ல. சு. க.க்கும் யூ.என்.பிக்கும் உள்ள வேறுபாடு அவித்த மீனுக்கும் பொரித்த மீனுக்கும் உள்ள வேறுபாடு தான் என்ற அதிதீவிரவாதிகளும்; எல்லாரும் சிங்கள ஏகாதிபத்தியவாதிகளே என்றவர்களும் மீண்டும் சிந்திக்க இது பயனுள்ள தருணம்.

★

## முல்லை எம்.பி. சொல்லும் பாடம்

முல்லைத்தீவு பா. உ. அடக்கத்தின் ஸ்தூலவடிவம். அவரை மனதில் வைத்துத்தான் திருவள்ளுவர் 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்று மொழிந்தார், பா. உ. முல்லைத்தீவில் நடந்த பிராந்தியத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தான் பங்குபற்ற முடியாமையை யிட்டு வெளியிட்ட செய்தி அவரது அடக்கத்துக்கு ஒரு எளிய எடுத்துக்காட்டு. அவருக்கு மாநாடு நடந்த நாள் வசதியில்லாமையால் அவரால் மாநாட்டில் எழுந்தருள முடியவில்லையாம். அவருக்கு வசதியானதொரு நாளில் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தால் கட்டாயம் எழுந்தருளியிருப்பாராம். தமிழ் மரமண்டைகட்கு பா. உ. க்களின் முக்கியத்துவமே தெரியாது. அவர்கள் பங்கு பற்ருத மாநாடு என்ன மாநாடா? தமிழ் இன்று உயிரோடு இருப்பதே அவர்களால்தானே. வருஷம் தவருமல் ஊர்ப்பணத்தில் உலகம் சுற்றித் தமிழ் வளர்க்கிருர்களே இதெல்லாம் தெரியாமல் உங்களுக்கு என்ன தமிழாராய்ச்சி மாநாடு வேண்டியிருக்கிறது? இனிமேலாவது எம்பியைக் கேட்டுவிட்டு மாநாட்டை ஏற்பாடு செய்யுங்கள் தம்பிகளே! கடைசி நேரத்தில் எம்பிக்கு வரமுடியாவிட்டால் மாநாட்டை ரத்து செய்யுங்கள்! மீனட்சி இல்லாத மதுரையா? மேயரில்லாத மாநாராட்சியா? எம்பி இல்லாத மாநாடா? தமிழர்களே உங்கள் அறிவு எங்கே! முல்லை பா, உ. நல்லவர். ஆதனல் தான் மாநாட்டைத் தன் மண்ணில் நடத்த அனுமதித்தார். இனியாவது எச்சரிக்கையாய் நடந்து கொள்ளுங்கள்! மாநாட்டுக்கு யாராவது மந்திரியையும் சேர்த்து அழையுங்கள்,

★

## பேராதனையில் மன்னிப்பு

வளாகத்தில் வன்முறைச் சம்பவங்கள் மேலும் தொடர்ந்ததையடுத்து மாணவர் நல அத்தியட்சகரின் ஆலோசனையின் பேரில் இரு மாணவர்கள் வளாகத்தினின்று நிறுத்திவைக்கப்பட்டனர். அவர்கள் பற்றிய விசாரணை ஒன்றும் அம்முடிவை ஆதரித்தது. ஆனல் இரண்டு வாரங்களின் பின் அவர்கள் மீண்டும் வளாகத்துக்குள் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் ஒருவர் ஒரு முக்கிய அமைச்சரின் நெருங்கிய உறவினர் என்று பேசப்படுகிறது. இச்சம்பவம், சம்பவங்கள் பற்றிய விசாரணைமீது மாணவர்களது நம்பிக்கையீனத்தை வலுப்படுத்தியுள்ளது. விசாரணையின் பலன்கள் பாதிக்கப்பட்ட மாணவர்கட்கு மேலும் துன்பங்களை விளைவிப்பதாகவே அமையலாம் என்று கருதப்படுகிறது. சன்சோனி விசாரணையை இனப்பகையைத் தூண்டிவிட சிங்கள பேரினவாத ஏடுகள் (தமிழ்இனவாதிகளும் கூடத்தான்) பயன்படுத்தியதை மறந்து விட்டிருக்க மாட்டோம் அல்லவா?

★

## நிலவைப் பார்த்துக் குரைப்பவர்கள்

கைலாசபதியைத் தூற்றுவதா போற்றுவதா என்று சூது-தந்திரன் கூட்டத்திற்கு தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. வாழ்ந்த காலம் முழுவதும் தூற்றித்தள்ளியவர்கள் சில காலம் முன்பு கைலாஸ் தங்களிடம் இரகசியமாக தங்கள் பிரிவினைவாதம் பற்றி உடன்பாடு தெரிவித்ததாகப் பேசிக்கொண்டார்கள். அந்தப் பொய்திரை கிழியும் என்பது அவர்கட்கே தெரியும். இறுதிக் காலம்வரை கைலாஸ் எழுத்திலும் பேச்சிலும் தேசிய ஒற்றுமை, அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு, சோவியத் மேலாதிக்கவாத எதிர்ப்பு போன்ற விஷயங்களில் தன்நிலைப்பாட்டில் ஐயத்துக்கு இடம் வைக்கவில்லை. இப்போது சூது—தந்திரன் கூட்டத்தின் அஞ்ஞானச் சுடர் பத்திரிகை கைலாஸ்மீது தனிப்பட்ட தாக்குதலைத் தொடுக்க ஆரம்பித்துள்ளது. தம் சுயநல நோக்குகளுக்காக கைலாஸ் மீது அபாண்டங்களைச் சுமத்திய ஒரு காகிதப் பூப்பத்திரிகையாளர் இந்தப் பொய்களை மறுப்பாரா அல்லது தன் பொய்கள் அம்பலமாகி விடுமே என்று அதைக் கண்டும் காணுமல் விட்டுவிடுவாரா? கைலாஸ் என்றுமே தமிழையும் தமிழரையும் வைத்துச் சூதாடும் கூட்டத்துக்கும் மகிழ்ச்சி ஏற்படச் செயற்பட்டவர் அல்ல. இருந்தபோது திட்டியும் கைலாஸ் என்ற மலை சாயவில்லை. இறந்த பின்பு திட்டியும் மலையளவான அவர் சாதனைகள் சாயப்போவது இல்லை.

★

## மீண்ட நினைவுகள்

கருணநிதிக்குத் இலங்கைத் தமிழர் ஞாபகம் வந்துவிட்டது! தி.மு,க. இப்போது மறுபடியும் ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று ஆரம்பித்து விட்டது. சோழியன் குடுமிசும்மா ஆடுமா? இந்திரா தி.மு.க. உறவு முற்ருகவேமுறிந்துவிட்டது. பாண்டிச்சேரியில் தி.மு.க. அரசு கவிழ்க்கப்பட்டு கவர்னர் ஆட்சி வந்துவிட்டது. எம்.ஜி.ஆர் — இந்திரா உறவு புதுப்பிக்கப்பட்டு வருகிறது. கருணநிதிக்கு மாநில சுயாட்சி ஞாபகம் வராமல் இருக்குமா? தமிழ்மொழி, இலங்கைத் தமிழர், இந்திராவின் குடும்ப ஆடசி, சர்வாதிகாரம் எல்லாமே இனி ஞாபகம் வரும். இனி உள்ளூர் சுதந்திரன் கும்பலுக்கும் கருணநிதிக்கும் மறுபடி நெருக்கம் அதிகமாகிவிடும். தமிழன் தலையில் மிளகாய் அரைக்கும் கொந்தராத்துக்கு அங்கே எம். ஜி. ஆருடன் கருணநிதி மோதல். இங்கே அமிர் கோஷ்டியுடன் சுதந்திரன் கோஷ்டி மோதல். இந்த அரசியல் குடுகுடுப்பைக் காரர்களில் எவருடைய கந்தலில் கிழிசல் குறைவு என்று பார்த்துத்தான் யாரையாவது தெரிவு செய்யுமாறு உள்ளது தமிழர்களுடைய கதி!

★

## இரும்புக் கரும்புக்-கரமும்

போன டிஸெம்பர் யூ. என். பி.-ஜே. வி. பி. மோதலின் பின்பு அதை விசாரித்த குழு யூ. என். பி. யினருக்கு எச்சரிக்கையும் ஜே. வி. பியினருக்கு பல்கலைக்கழகத்தினின்றே வெளியேற்றத்தையும் சிபார்சுசெய்ததாகவும் குழுவின் மூவரில் ஒருவர் இம்முடிவை முற்ருகவே எதிர்த்ததாகவும் பேசப்படுகிறது இச் சிபாரிசு பல்கலைக்கழக நிர்வாகபீடத்தால் சில மாற்றங்களுடன் அங்கீகரிக்கப் பட்டு சில யூ. என் பி. மாணவர்கட்கு 3 மாத விலக்கலும் சில ஜே. வி. பி. மாணவர்கட்கு 3 வருட விலக்கலும் யூ. என். பி. யைச் சேர்ந்த மாணவர் விடுதி உதவி அதிபர்கட்குப் பதவி நீக்கமும் என்று முடிவாகியுள்ளதாம். இதனல் யூ. என். பி. யினருக்கு ஒரு பெருநட்டமும் இல்லை. வேறு நல்ல வேலையா கிடைக்காது? மூன்று மாதவிலக்கலையும் சற்றே காலம்தள்ளிப்போட்டு ஏதாவது மூடிக்கட்டவும் முயற்சிக்கலாம். இத்தனைக்கும் சம்பவங்களுக்கு மூலகாரணம் யூ. என். பி. யினரின் சண்டித்தனமே என்ற கருத்து பரவலாக நிலவுகிறது.

(இரண்டு மூன்று வருடங்கள் முன்பு ஒரு ஜே. வி. பி மாணவரை நூலகத்தின் அருகே கத்தியால் குத்திய ஒரு யூ. என். பி. மாணவர் பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என்ற விஷயமும் மாணவரிடையே பரவலாகப் பேசப்படுகிறது.)

மேற்கூறிய டிஸெம்பர் சம்பவத் தண்டனைகளை இனவாதச் சம்பவத்திற்குரிய தண்டனைகளுடன் (விதிக்கப்பட்டால்) சேர்த்துக்குழப்பி அதன் மூலம் யூ. என். பி. காடையர்களைக் காப்பாற்ற முடியும் என்ற எதிர்பார்ப்பும் உருக்கலாம் என்றும் பேசப்படுகிறது.

★

# இனவாத வன்செயல்களும் அதன் சூத்திரதாரிகளும்

இனவாத வன்செயல்கள் நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காரணமின்றி மிகவும் அநாகரீகமான முறையில் தமிழ் மக்கள் பல இடங்களில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலையில் பல தமிழர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். தாக்குதல்கள், கொள்ளை தீவைப்பு போன்றவை பல இடங்களில் நடைபெற்றுள்ளன. என்ன காரணத்திற்காக நாம் தாக்கப்படுகிறோம், கொலை செய்யப்படுகின்றோம் அல்லது கொள்ளைக்கும் தீவைப்புக்கும் ஆளாகப்படுகின்றோம் என்பதை அறியாத நிலையிலேயே தமிழ் மக்கள் நாட்டின் பல பகுதிகளில் பரிதாபகரமான முறையில் பாதிப்புகளுக்கு உள்ளாகி உள்ளனர்.

இவ் இனவாத வன்செயல்கள் தற்செயலானதோ அன்றி திடீர் ஆத்திர உணர்வால் ஏற்படும் வன்செயல்களாகவோ கொள்ளமுடியாது. இவை நன்கு திட்டமிடப்பட்டே செயல் படுத்தப் படுகின்றன என்பதை மிக எளிதிலேயே உணர முடிகின்றது பணம், பதவி, அதிகாரம் என்பவற்றைக் கொண்ட செல்வாக்கு மிக்க இனவெறிச் சக்திகளின் திட்டமிட்ட நடவடிக்கையாலும் ஆயுதப்படைகளின் உள்ளோரின் உதவி, உற்சாகத்துடனும் இவ் இனவாத வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

பேராதனை, மொறட்டுவை, கொழும்பு பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்கள் தாக்கப்பட்டமையும், இனத்துவேஷ விஷமப் பிரசாரங்களும் தற்செயலானவை அல்ல. பேராதனை பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற இனவாதத் தாக்குதல்கள் அப்பல்கலைக் கழகச் சரித்திரத்திலேயே முதல் தடவையானது எனக் குறிப்பிடப் படுகின்றது. அங்கு பெரும்பான்மையான சிங்கள மாணவர்கள் இவ்இனவாத வன்செயல்களுக்கு எதிராகவும், தமிழ் மாணவர்களுக்கு ஆதரவாகவும் இருந்தும்கூட மீண்டும் மீண்டும் தமிழ் மாணவர்கள் தாக்கப்படவும், மிரட்டப்படவும் கூடிய நிலை நீடிப்பதானால் அந்நிலைக்கான சூத்திரதாரிகள் சாதாரண சக்திகளாக இருக்க முடியாது.

அதேபோல் திருகோணமலைச் சம்பவங்களைப் பார்க்கும் போது திட்டமிட்ட சக்திகளின் தொடர் நடவடிக்கைகள் என்பது தெளிவாகும். அவசரகாலநிலை, ஊரடங்குச் சட்டம் போன்றவற்றின் மத்தியில் பட்டப்பகலில் இனவாத வெறியாட்டம் என்றால் இதற்கு எங்கிருந்து ஆதரவு கிடைக்கிறது என்பதை சாதாரண ஒரு குழந்தை கூடக் கண்டு பிடித்துவிடும்.

இவ் இனவாதச் சம்பவங்களுக்கும் வடபகுதிச் சம்பவங்களுக்கும் முடிச்சுப் போட்டுக் காட்ட சில சக்திகள் முனைகின்றன. வடக்கே அரச பயங்கரவாதத்திற்கும் — தனிநபர் பயங்கரவாதத்திற்கும் இடையேதான் பிரச்சினையே அன்றி தமிழ்-சிங்கள மக்களுக்கிடையில் அல்ல என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். இளைஞர்கள் சிலரின் செயல்களுக்காக ஒன்றுமறியாத அல்லது எவற்றுடனும் சம்மந்தமில்லாத சாதாரண தமிழ்மக்கள் கொல்லப்படவும், தாக்கப்படவும் வேண்டுமா? ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக தமிழ் மக்கள் தாக்கப்படுவதானால் அதைவிடக் கீழ்த்தரமான செயல் வேறு எதுவுமாக இருக்க முடியாது. ஆயுதப் படையினருக்கும் மக்களுக்கும் அல்லது இளைஞர்களுக்கும் இடையிலான முரண்பாடும் சச்சரவும் இயல்பானதும் தவிர்க்க முடியாததாகும். அதை இனவாதமாகவும் கேவலமான வன்செயல்களாகவும் மாற்றிவரும் இனவெறி சக்திகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும்.

இன்று வடக்கே நிலவும் நிலை 1971-ல் தெற்கே நிலவவில்லையா? அன்றும் இளைஞர்களுக்கும் ஆயுதப்படைகளுக்குமிடையில் சச்சரவு ஏற்படவில்லையா? அண்மையில் கூட கொழும்பு வணுத்தமுல்லையில் விமானப் படையினருக்கும் மக்களுக்குமிடையில் சச்சரவு ஏற்பட்டு மூன்று உயிர்கள் பறிக்கப்படவும் பலர் படுகாயங்கள் அடையவும், வீடுகள் தீக்கிரையாக்கப் படவும் இல்லையா? நிலைமை இவ்வாறு இருந்தாலும் வடபகுதிச் சம்பவங்கள் தெற்கே சில தாக்கங்களை ஏற்படுத்தவே செய்கிறது என்பதை கவனத்தில் கொள்ளாமலும் விடமுடியாது. அதை இனவெறி சக்திகள் தமது நோக்கிற்கும், போக்கிற்கும் பயன் படுத்துகிறார்கள் என்பதையும் மறுக்கமுடியாது.

தமது ஆளும் வர்க்க, அதிகார, பதவி வேட்கைக்காகவும் பொருளாதார அரசியல் மேம்பாட்டிற்காகவும் ஒரு திட்டமிட்ட இனவெறிக் கும்பல் பல செல்வாக்கைப் பாவித்து இனவாத வன்செயல்களை தொடர்ச்சியாகச் செய்து வருகின்றது. இதை ஆட்சியில் உள்ளோர் கண்டு பிடிப்பார்களா? அல்லது கண்டும் காணாதது போல் நடந்து கொள்வார்களா? இந்த இனவெறிக் கூட்டத்தின் நடவடிக்கைகளை பெரும் பாண்மையான சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இனிமேல் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். இவ்விதமான இனவெறிக்கும்பலுக்கு சிங்கள மக்கள் தகுந்த பாடத்தை கற்பித்தால் அன்றி அத்தகைய நடவடிக்கைகள் நிரந்தரமாக அற்றுப்போக முடியாது. பெரும்பான்மையான சிங்கள மக்கள் சிங்கள இனவெறிக்கு எதிராக செயல் படுவதற்கு தமிழ் மக்களும் தமது சரியான நிலைப் பாட்டை உறுதிப்படுத்திக்கொள்வது அவசியம். ஒரு பக்கத்திடம் இருந்து மட்டும் நீதி நியாயத்தை எதிர்பார்க்கக்கூடாது. இரு இன மக்களும் சரியான தீர்வுக்கு தத்தமது கடந்த கால ஆளும் வர்க்க அரசியல் தலைவர்களினது தவறான வழிகாட்டல் நிலைப்பாட்டில் இருந்து முற்றிலும் விடுபடுவதற்கு முன்வரல் வேண்டும். முற்றிலும் புதிய சூழ் நிலையில், புதியதோர் அரசியல் தீர்வு நோக்கி இரு இனமக்களும் முன்னேறவேண்டும்.

—நமது நிருபர்—

ஆளும் வர்க்கமும் ஆயுதப் படைகளும் எவ்வளவுக்கு இன உணர்வு பற்றிப் பேசினாலும் வர்க்கம் என்ற நிலை கூர்மையடையும் போது அவற்றின் சுயரூபத்தை சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் தெளிவாகக் காண முடியும். அதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்கனவே இலங்கைச் சரித்திரத்தில் நிறையஇடம் பெற்றுள்ளதையும் காணலாம். ★

# சைக்கிள் தடை!

வடபகுதியில் பயங்கரவாதத்தை ஒழிக்கும் திட்டத்தில் ஒரு அபூர்வ யோசனை முன்வைக்கப்பட்டதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. அதாவது 'பயங்கரவாத' செயல்களுக்கு இளைஞர்கள் சிலர் சைக்கிள்களைப் பாவிப்பதால் வடபகுதியில் சைக்கிள்களுக்கு தடை விதிப்பதே அவ் ஆலோசனையாகும். இவ்விதம் ஆலோசிக்க முற்பட்டால், சைக்கிள், மோட்டார் சைக்கிள், மோட்டார்கார், மினி பஸ், வீதிகள், ஒழுங்கைகள் என்று தடைகளின் எண்ணிக்கை அதிகரித்து இறுதியில் குறிப்பிட்ட வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் யாருமே இருக்கக் கூடாது என்ற தடைவந்தாலும் ஆச்சரியப்படத்தேவை இல்லை கிட்லர் பாணியில் சம்பவங்கள் இடம் பெறுவதைப் பார்த்து புன்னகை புரியும் கொடுங்கோல் ஆட்சிக்கு வேறு என்ன தான் ஆலோசனை கிடைக்கும்,

# மாவட்ட சபைகள் என்பது வெறும் பேச்சு மடங்களே!

நாட்டில் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் உருவாக்கப் பட்டு இரண்டு ஆண்டுகள் சென்றுவிட்டன; இந்த மாவட்ட சபைகளுக்கு அரசாங்கம்இரண்டு அர்த்தங்களைக் கொடுத்தது. ஒன்று, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாகத் தமிழர் கூட்டணியின் ஆதரவுடன் அவை கொண்டுவரப்பட்டுள்ளன என்றும், இரண்டாவது நாட்டின் நிர்வாகத்தைப் பரவலாக்கி மாவட்டசபைகளின் மூலம் அபிவிருத்தியை பன்முகப் படுத்தவே என்றும் வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டது. இவ் இரு அர்த்தங்களும் அடிப்படையில் நாட்டு மக்களை ஏமாற்றவே செய்யப் பட்டவை என்பது இன்று தெளிவாகி விட்டது. மாவட்ட சபைகளின் மூலம் தமிழர் பிரச்சினையும் தீரவில்லை. அதேபோல் சிங்கள மக்கள் மத்தியில் அமோக அபிவிருத்தியும் உருவாகவில்லை. பதவிகளும், சம்பளங்களும், பட்டங்களும் இன்னும் சில சலுகைகளையும் சிலரால் பெறமுடிந்ததைத் தவிர உருப்படியான ஒன்றுமே நடைபெறவில்லை. சில மாவட்ட சபைகள் மாதத்தில் ஒருமுறை இருமுறையோ கூடி தமது மாவட்டத்தின் குறைகளைப் பற்றி பட்டியல் போடுவார்கள். தலைவர் இவற்றுக்கெல்லாம் பணம்இல்லையே என்று கையை விரிக்க கூட்டம் முடிவடைந்துவிடும். அங்கத்தவர்களும் கலைந்து விடுவார்கள். அதற்கு அப்பால் அதிகம் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு மாவட்ட சபைகளில் எதிர்கட்சியினர் கூட மிகமிகக் குறைவே.

அதேவேளை அடிக்கடி காரசாரமான பேச்சுக்களை சில மாவட்ட சபைகளில் கேட்கவும் முடிகிறது. அவை வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழர் கூட்டணியின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள மாவட்டசபைகளேயாகும் இச் சபைகளிலே அரசின் மீது குற்றம் சுமத்தும் குரல்கள் சற்று ஓங்கியே ஒலிக்கும். பணம் இல்லையே அதிகாரம் போதாதே! நாம் என்னத்தைச் செய்யமுடியும் என்ற பரிதாபக் குரல்களும் கூட்டணி அங்கத்தவர்களிடையே இருந்து கிளம்புவதைக் காணலாம். அவைகூட அரசை ஆத்திரப்படுத்தும் தொனியில் அல்ல அரவணைத்து காரியம் பார்க்கவேண்டும் என்ற தந்திரப் பேச்சாகவே இருக்கும்.

அண்மையில் யாழ்— அபிவிருத்தி சபையின் கூட்டணி உறுப்பினர் க. சின்னத்துரை மிகக் காரசாரமாகப் பேசினார். மாவட்டசபைக்கு போதிய அதிகாரம் கிடைக்காவிட்டால் சகல உறுப்பினர்களும் யூன் 30ம் திகதியுடன் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் இடித்துரைத்தார். இரண்டு வருடங்களாக அமைதியாகத்தானே அக் கூட்டணி உறுப்பினர் இருந்தார். அதுவும் அமிர், ஆலால் என்றால் அவருக்கு பேச்சேவராது. ஏன் இப்படிப்பேசினர் எனப் பலரும் ஆச்சரியம் கொண்டனர். பின்பு தான் விஷயம் வெளிச்சத்துக்கு வந்தது. அதாவது திரு. சின்னத்துரை கனவான் ஒப்பந்தப்படி யூன் 30ம் திகதியுடன் தனது மாவட்ட சபை உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டுமாம். இதற்காகவே அவ் உறுப்பினர் இவ் இறுதிப் பேச்சுப் பேசி மாவட்ட சபையின் இயலாத் தன்மையைப் புட்டுக் காட்டி விட்டார். தொடர்ந்தும் அப்பதவி அவருக்கு இருக்கும் சூழ்நிலை இருந்தால் அந்த உறுப்பினர் அப்படி பேசி இருக்கவே மாட்டார் என்றே பேசப்படுகிறது.

இது கூட்டணியின் பதவி வேட்கையையும், மாவட்ட சபை என்ற பம்மாத்து விளையாட்டுக்களையும் மக்களுக்கு அம்பலப் படுத்துகின்றது மாவட்டசபைத் தலைவர்களுக்கு வசதியான காரியாலயங்கள், உத்தியோக பூர்வமான வாகனவசதி, சம்பளம், இன்னும் பிற சலுகைகள், அந்தஸ்து அதே போல் அங்கத்தவர்களுக்கும் சுமாரான சம்பளம் மற்றும் வசதிகள் குறைவின்றி கிடைக்கின்றன. தமக்கு வசதியான வற்றை உரத்துப்பேசலாம் சிலவற்றை மெல்லியதாகப் பேசலாம். பிரச்சனைக்குரியதென்றால் பேசாதும் விடலாம்.

மாவட்டசபைகள் இரண்டு ஆண்டுகளை பூர்த்தியாக்கின்றன. கிராம பட்டின சபைகளின் கீழ் வீதிகள், ஒழுங்கைகள், சந்தைகள், கடைகள், மயானங்கள் கூட ஓரளவு ஒழுங்காக பராமரிக்கப்பட்டன. இன்று பெயர் மாற்றத்தை தவிர அபிவிருத்திகள் வேண்டாம் நல்ல பராமரிப்பாவது கிடையாதா என மக்கள் விசனம் கொள்ளும் நிலைக்கு மாவட்ட சபைகள் வெறும் பேச்சுமடங்களாகவே இருந்து வருகின்றன.

மாவட்ட சபைகளின் ஆட்சிக்காலம் நான்கு ஆண்டுகள் - இதில் இரண்டு சென்றுவிட்டன மக்களை ஏமாற்றுவதில் ஐந்து ஆண்டுகளை கழித்த யூ. என். பி. க்கு அடுத்தஇரண்டு ஆண்டுகளைக் கொண்டிருப்பது பெரியவிஷயம் அல்லவே. தமிழர் கூட்டணி யூ. என். பியின் இழுபாட்டிற்கு தாளம் போடுவதில் இருந்து விலகமாட்டாது தானே. அடிப்படையில் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். ஆளுவோரும் அவர்களுக்கு துதிபாடுவோரும் தமது ஏமாற்றத்தைத் தொடருகின்றனர். ஆனல் ஒருநாள் இவர்கள் மக்களுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும். ★

## சிந்திக்கவேண்டிய செய்திகள்

அண்மையில் அக்குரஸ்ஸ வலிஹேன என்ற கிராமத்தைச் சேர்ந்த காந்தி விஜேயசிங்க என்ற 21 வயது யுவதி தற்கொலை செய்து கொண்டார். சில வருடங்களாக மேற்படி யுவதி வேலை தேடி வந்தார் எனவும் அதனல் ஏற்பட்ட விரத்தியே இத் தற்கொலைக்கு காரணம் என அவரது தாயார் சாட்சியம் அளித்தார். தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

★

புகழ் பெற்ற பேராதனை லங்காதிப பௌத்த ஆலயத்தில் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளை போயின. எட்டரையடியுள்ள இரண்டு யானைத்தந்தங்களும், ஒரு வெள்ளிப் பேழையும் இவற்றுள் அடங்கும். —பத்திரிகைச் செய்தி — இக் கொள்ளையைச் செய்தவர்கள் யாராக இருக்கலாம்?

★

சாவகச்சேரி பகுதியை சேர்ந்த மட்டுவில் என்னும் இடத்தில் பகல் வேளை தனது வீட்டில் தனியாகப் பிள்ளைக்கு பாலூட்டி கொண்டிருந்த இளம் தாயை வாளால் வெட்டி விட்டு அவ் வீட்டில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பணம்— நகை — பொருட்கள் கொள்ளை அடித்துச் செல்லப்பட்டது- வாழ் வெட்டுக்கு இலக்கான அவ்விளம் தாய் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் — பத்திரிகைச் செய்தி — இதைச் செய்தவர்கள் யாராக இருக்கலாம்?



# கார்ல்மார்க்ஸ் பற்றி ஹூயாபாங் உரை

மார்க்ஸ் 19ம் நூற்றாண்டின் ஜேர்மனியர். ஆனால் அவரது செல்வாக்கு காலத்தையும், இடத்தையும் மிகவும் கடந்துள்ளது. முற்போக்கு மானிடத்தின் முழுமைக்கும், உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கும், சகல ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், தேசங்களுக்கும் அவர் உரியவர். மாக்சின் மரணத்தைத் தொடர்ந்து பிரடெறிக் ஏங்கெல்ஸ் கூறியதுபோல மாக்ஸ் தனது சக்திமிக்க சிந்தனையால் மேற்கு-கிழக்கு மண்டலங்கள் இரண்டினதும் பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு வளமூட்டினர். மாக்சின் கோட்பாட்டு ஒளிபரப்புதலின் கீழே சீனாவின் கம்யூனிஸ்ட்டுக்களும் பாட்டாளிவர்க்கமும், சகல தேசிய இனங்களும் இந்தப் பிரமாண்டமானதும், கிழக்கின் பின்தங்கிய நாட்டில் சரியான புரட்சிக்கும், விடுதலைக்குமான பாதையை மேற்கொண்டனர். சீனமக்கள் இப்போது புதிய ஜனநாயக, சோஷலிச புரட்சியைசாதித்து இந்தமாபெரும் சோஷலிச நாட்டின் ஆட்சியாளர்களாஞர்கள். நாம் சோஷலிச நவீன மயமாக்கலின் சகல துறைகளிலும் ஒரு புதிய நிலைமையை உருவாக்கி, ஒரு சோஷலிச பொருளாயத, தார்மீக நாகரீகத்தை கட்டியெழுப்பவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 12வது தேசிய மகாநாட்டினுல் முன்வைக்கப்பட்ட உன்னத வேலைத்திட்டத்தை நிறைவேற்றவும் பாடுபடுகின்றோம். மாக்சின் கோட்பாடு இல்லாவிட்டால் சீஞ அது இன்றுள்ள நிலைக்கு வந்திருக்கமுடியாதென நாம் அனைவரும் மிகவும் ஆழமாக உணருகின்றோம். நாம் மாக்சிடமிருந்து கற்றுக்கொண்டோம். அவரது படைப்புகளிலிருந்து உணர்வு பூர்வமாகப் படித்து அறிவையும், பலத்தையும் பெற்றுக்கொண்டோம். தொடர்ந்தும் அவ்வாறே செய்வோம். லண்டனில் நிரந்தர அமைதியில்

வும் ஒருசக்திமிக்க ஆயுதமாக வழங்கினர்.

பொருள்முதல்வாதத்தை இயங்கியலுடன் இணைத்தும் மனித சமுதாயத்தின் சரித்திரத்தை அவதானிக்கவும் ஆராயவும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தைப் பிரயோகித்த முதல் நபர் மாக்ஸாகும். முழுமையாக எடுத்துக்கொண்டால் மனிதனின் சமூக அரசியல் தத்துவார்த்த வாழ்வில் பொருள் உற்பத்தியே அடிப்படை

ஐரோப்பிய சமுதாயம் பலாத்கார எழுச்சியில், புரட்சிகரப் புயலிக்களில் திளைத்து நின்ற 19ம் நூற்றூண்டில் அவர் தனது புரட்சிகர நடவடிக்கையை மேற்கொண்டார். இந்தப் புயல்களின் சோதனையில், குறிப்பாக 1871 பாரிஸ் கம்யூன் என்ற மாபெரும் போராட்டத்தின் இறுக்கமான சோதனையினூடே முன்பு பிரபல்யம் வாய்ந்திருந்த பல்வேறு வகைப்பட்ட சோஷலிசக் கருத்துக்கள் படிப்படியாகச் செல்வாக்கற்றன. மாக்

யும் நடைமுறையையும் பிரித்தலைட்பதால் திரிபுவாதமும், புத்தகவாதமும் மாக்சிசத்திற்கு எதிரானவையாகும். மாக்சிசம் வளர்ச்சி பெறும் விஞ்ஞானம், அது புரட்சிக்கு வழிகாட்டி, புதிய நிலைமைகளில் நடைமுறையில் எழும் பிரச்சினைகளைத் தொடர்ச்சியாக பகுத்தாராய்ந்து படித்து வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு நாடுகளில் ஸ்தூலமான புரட்சிகர நடைமுறையுடன் இணைப்பதன் மூலமே

அட்போது உலகின் [illegible] நிலவிய நிலைமைகளைக் கருத்திற் கொண்டு தோழர் மாசேதுங் அவர்களும் எமது கட்சியும் மாக்சிசம்–லெனினிசத்தின் சர்வதேச உண்மைகளை சீனாவின் ஸ்தூலமான நிலைமைகளுக்கேற்ப ஒருங்கிணைத்து கிராமப்புறத்தில் தொழிலாள வர்க்கத்தின் சக்திமிகு நேச அணியும் பிரபுத்துவத்திற்கு எதிரான பிரதான புரட்சிகர சக்தியுமான விவசாயிகளைத் தங்கிநின்று கிராமப்புறத்திலிருந்து நகரங்களைச் சுற்றிவளைக்கும் சரியானபாதையை கண்டுபிடித்தார். இதிலிருந்து மாசேதுங் சிந்தனை உருவெடுத்ததுடன் சீனப் புரட்சியும் வெற்றிபெற்றது. நாம் இந்தப் பாதையை எடுத்திராமல் ஐரோப்பாவைபோல பாரம்பரியமான புரட்சி முறையை இறுகப்பிடித்து நகர்புறத்திலிருந்து ஆயுதக் கிளர்ச்சிகள் மூலம் அரச அதிகாரத்தைக்கைப்பற்ற முயற்சி எடுத்திருந்தால் விளைவு என்னவாயிருக்கும்? சீனப் புரட்சி வெற்றி பெற்றிராது.

சரித்திரத்தில் மாக்சிசத்தின் வளர்ச்சியில் நாம் கற்றுக் கொள்ளும் பாடம் இதுதான்; ஒவ்வொரு நாட்டு மாக்சிசக் கட்சியும் தனது சொந்த ஸ்தூலமான நிலைமைக்கும் சர்வதேச, உள்நாட்டு நிலைமைக்கும் ஏற்ப சொந்தமார்க்கத்தையும் கொள்கைகளையும் வகுக்காவிட்டால் புரட்சியிலும் நிர்மாணத்திலும் வெற்றிபெற முடியாது என்பதுதான்.

இரண்டாவது உலகயுத்தத்தின்பின் மூன்று தசாப்தங்களாக உலக கம்யூனிஸ்ட் இயக்கம் ஒரு கடினமான வளர்ச்சிப்போக்கை மேற்கொண்டுள்ளது. அது சிறப்பான சாதனைகளையும் வெற்றிகளையும் பெற்றுக் கொண்ட அதேவேளை மோசமான பின்னடைவுகளையும் தோல்விகளையும் அனுபவித்து கொந்தளிப்பு, பிளவுகளினால் ஒரு தடுமாற்ற நிலையையும் எதிர்நோக்கியது. இந்தச் சிக்கலான அசாதாரண சரித்திர நிகழ்ச்சியானது உலகம் பூராவும்பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியது. பின்னடைவுகளை கண்டு சிலர் ஆனந்தம் கொண்டனர். அதேசமயம் வேறு சிலர் நம்பிக்கை இழந்து மாக்சிசம் ஒரு நெருக்கடிக்குள்

## மாக்ஸின் கோட்பாடு இல்லாவிட்டால் சீனம் இன்றைய நிலைக்கு வந்திராது!

என்ற உண்மையை இறுதி ஆய்வு புலப்படுத்தும் என்பதும், உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்குமிடையேயான முரண்பாடே சரித்திர வளர்ச்சியின் உண்மையான உந்து சக்தி என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மனித சரித்திரத்தில் வர்க்கப் போராட்டத்தின் பாத்திரத்தையும் வர்க்கங்கள் எந்த நிபந்தனைகளின்கீழ் தோன்றி வளர்ந்து, அற்றுப்போகின்றன என்பதையும் அவர் விஞ்ஞான பூர்வமாக விளக்கினர்.

உழைப்பை மூலதனம் சுரண்டும் இரகசியத்தை—உபரி மதிப்பு விதியையும் எந்தச் சூழலில் முதலாளித்துவம் தோன்றி வளர்கின்றது என்பதையும் அது தவிர்க்கமுடியாமல் இறுதியில் கம்யூனிசத்தால் மாற்றப்படுகிறது என்பதையும் முதன் முதலில் கண்டுபிடித்தவர் மாக்ஸேயாகும்.

இதன் மூலம் கற்பனாவாத சோஷலிசத்தை விஞ்ஞான சோஷலிசமாக முதலில் மாற்றி பழைய அமைப்பை அகற்றி அதனிடத்தில் புதிய சமுதாயமொன்றை உருவாக்கும் புதிய சமுதாய சக்தியாக நவீன பாட்டாளிவர்க்கம் விளங்குகிறதென்பதையும் அந்த வர்க்கமே சிறந்த எதிர்காலமுடையதும் மிகவும் புரட்சிகரமான வர்க்கமுமாகுமென்பதையும் நிரூபித்தார்.

இவ்வாறு சரித்திரம் பொருளாதாரம், தத்துவம்

சின் கோட்பாடுமட்டுமே மிகவும் விரைவாக பல திசையிலும் பரவிற்று. பாட்டாளி வர்க்கத்தினதும் மக்களினதும் நலன்களை உண்மையாக அது பிரதிநிதித்துவப் படுத்தியதாலும் பழைய புதிய புரட்சிகர இயக்கங்களின் அனுபவங்களை முறையாகத் தொகுத்ததாலும் இது சாத்தியமாயிற்று. வெளிநாட்டில் ஒரு சிறு குழுவாயிருந்த புரட்சிவாதிகளைக் கொண்டு மாக்ஸ் தானே உருவாக்கிய பாட்டாளி வர்க்கக் கட்சி உலகம் முழுவதும் நடுங்குமளவிற்கு ஒரு சக்திமிக்க கட்சியாகிலது.

அதன் உயிரூட்டம் தங்கியுள்ளது. இதுவே மாக்சிசம் தங்கு தடையின்றி ஊட்டம் பெற்று வளர்ச்சிபெறுவதற்கும், அதிகரித்துவரும் புரட்சிகர உத்வேகத்திற்கும் அடிப்படை உத்தரவாதமுமாகும்.

மாக்சும், ஏங்கெல்சும் மரணமானபின் லெனினும், ரஷ்யக் போல்ஷ்விக் கட்சியும் தலைமைதாங்கிய ஒக்டோபர் புரட்சியின் வெற்றி மாக்சிசத்தின் ஒரு உன்னதமான வளர்ச்சியின் முதலாவது நிகழ்ச்சியாகும். லெனினும் அவரது கட்சியும் மாக்

---

கார்ல்மாக்ஸ் இறந்த நூற்றூண்டு தினத்தை ஞாபகார்த்தம் செய்து 1983 மார்ச் 13ம் திகதி பெய்ஜிங் மக்கள் மாமண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் ஹூயாபாங் அவர்கள் ஆற்றிய நீண்ட சொற்பொழிவின் ஒரு பகுதியை சுருக்கி இங்கு தருகின்றோம். உபதலைப்பு எம்முடையதே. (ஆர்—ஜமு)

---

மாக்சும், ஏங்கெல்சும் இறந்துவிட்டார்கள். ஆனால் மாக்சிஸம் மிகவும் உற்சாகமான வேகத்துடன் வளர்ச்சி பெற்றுள்ளது. பல்வேறு எதிர்த்தத்துவார்த்த போக்குகளின் தாக்குதல்களையும், பிற்போக்குகளின் தாக்குதல்களையும், பிற்போக்கு சக்திகளின் 'சுற்றி வளைத்து அடக்குதல்' என்பவற்றையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகச் சமாளித்து வெற்றிபெற்றதை மாக்சிசத்

சிசத்தின் சர்வதேச உண்மைகளை ஏகாதிபத்திய காலகட்டத்தில் உலகநிலையையில் ஏற்பட்ட வளர்ச்சியையும் ரஷ்யாவில் நிலவிய ஸ்தூலமான நிலைமைகளையும் கருத்திற்கொண்டு தமது சொந்த மார்க்கத்தையும் கொள்கைகளையும் வகுத்தார்கள். இதிலிருந்தே மாக்சிசம் ஒரு புதிய கட்டத்திற்கு வளர்ச்சிபெற்றது. லெனினிசம் தோன்றியது. ஒட்டோபர் புரட்சி

## மாக்ஸிஸம் வளர்ச்சி பெற்றுச்செல்லும் விஞ்ஞானமாகும்

## அதை ஒவ்வொரு நாட்டின் ஸ்தூல நிலைக்கும் பிரயோகிக்க வேண்டும்!

ஆழ்ந்துள்ள கார்ல்மாக்சை நினைவு கூரும் நாம் கிழக்கே நடைபெறும் இந்த நினைவாஞ்சலிக் கூட்டத்தில் அவருக்கு எமதுஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

மனித சமுதாயத்திற்கு மாக்ஸ் அளித்த மிகப்பெரிய பங்களிப்பு அவரது விஞ்ஞான கம்யூனிசக் கோட்பாடாகும். இதை மாக்ஸ் அவரது மிக நெருங்கிய போராட்டத் தோழரான ஏங்கெல்சுடன் சேர்ந்து உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கும், முற்போக்கு மக்களுக்கும் அவை பழைய உலகத்தை விமர்சிக்கவும், ஒரு புது உலகத்தை உருவாக்கவும், தமது சொந்த விடிவுக்கு போராட

என்பவற்றில் மிகவும் தாக்கமான மாற்றத்தை ஏற்படுத்தி ஓர் உண்மையான விஞ்ஞான உலக நோக்கையும் சமுதாயப் புரட்சிபற்றி முழுமையான கோட்பாட்டையும் ஏற்படுத்தினர்.

மாக்சிசம் தோன்றியதிலிருந்தே வேறு எந்த கொள்கைகளும் ஒப்பிட்டுப்பார்க்க முடியாதவாறு அதன் வலிமையை நிலைநாட்டிக்கொண்டது. தனது இளமையிலேயே புரட்சியிற் சேர்ந்துகொண்ட மாக்ஸ் ஒரு கம்யூனிஸ்ட்டாகியபின் தொழிலாள இயக்கத்திற்குநேரடியாகத் தலைமை தாங்கி தனது முழுவாழ்வையுமே பாட்டாளி வர்க்கத்தின் விடிவிற்காக அர்ப்பணித்தார்.

தின் சரித்திரம் சென்ற நூற்றுண்டில் கண்டது. எவ்வளவு பாரதூரமான பின்னடைவுகளையும், பயங்கரப் புயல்களின் மத்தியிலும் அதன் புரட்சிகர உந்துதல் தொடர்ந்தும் தோற்கடிக்கமுடியாததாகவுள்ளது. மாக்சிச இயக்கத்தினுள்ளேயே பல்வேறு தவறான போக்குகளை வெற்றிகொண்டு தொடர்ந்து முன்னேறிச் சென்றதை கடந்த நூற்றுண்டின் மாக்சிச சரித்திரம் மீண்டும் மீண்டும் கூறுகிறது. மாக்சிசத்தின் சர்வதேச உண்மையை நிராகரிப்பதால்திரிபுவாதம் தவருனது. மாக்சிசத்தை ஒரு குறிப்பிட்ட இறுக்கமான வரையறைக்குள் பூட்டிவைப்பதால் புத்தகவாதமும் தவருனது. நிதர்சன உலகையும் கோட்பாட்டை

வெற்றிபெற்றது. சோஷலிசப் புரட்சி முதலில் ஒரு நாட்டில் வெற்றிபெற்றது. லெனினும் ரஷ்ய போல்ஷ்விக் கட்சியும் ரஷ்யாவில் நிலவிய உண்மை நிலைக்கு ஏற்பச் செயற்படாமல் பாட்டாளிவர்க்கப்புரட்சி ஒரேசமயத்தில் பிரதான முதலாளித்துவ நாடுகளில் வெற்றி பெறவேண்டுமென்ற மாக்சிசத்தின் குறிப்பான முடிவுகளை மட்டும் இறுகப்பற்றிக்கொண்டிருப்பின் விளைவுகள் என்னவாயிருந்திருக்கும்? ஒக்டோபர் புரட்சி வெற்றிபெற்றிருக்காது.

ஒக்டோபர் புரட்சிக்குப் பின் மாக்சிச சரித்திரத்தின் வளர்ச்சியில் மிகமுக்கியமான ஒரு நிகழ்வாக சீனப்புரட்சியின் வெற்றி அமைகின்றது.

இருப்பதாக வர்ணித்தனர். இவ்வாறான நெருக்கடிகள் மத்தியிலும் பல்வேறு நாடுகளின் மாக்சிச கட்சிகளும் அமைப்புகளும் பலவிதமான தாக்குதல்களை வீரத்துடனும் அமைதியுடனும் எதிர்த்துநின்று போராடினர். இந்தக் கடினமான வளர்ச்சிப் போக்கில் சகல உண்மையான மாக்சியவாதிகளும் தூர நோக்குக்கொண்ட மக்களும் ஒரு முக்கியமான திடமான காரணியைப் பகுத்துணர்ந்து கொள்கின்றனர் — மேலும் மேலும் மாக்சியக் கட்சிகளும் அமைப்புக்களும் அரசியல் ரீதியாகவும் தத்துவார்த்தரீதியாகவும் மூடநம்பிக்கையிலிருந்து விடுபட்டு தாமாகவே சிந்தித்து சுயமாகவே சர்வ

(7-ம் பக்கம் பார்க்க)

# மாக்ஸியமும் அதன் எதிரிகளும்

மார்க்ஸியம் அதன் தோற்றம் முதலாக அதன் சமகால வளர்ச்சிவரை பல்வேறு முனைகளிலும் எதிர்ப்புக்களைச் சமாளித்தே வளர்ந்து வந்துள்ளது. இத்தகைய எதிர்ப்புகள் பலவேறு நோக்கங்களாலும் வரலாற்றுச் சூழ்நிலைகளாலும் தூண்டப்பட்டனவும் தன்மையிலும், அளவிலும், பெருமளவும், வேறுபட்டனவுமான போதும், இவற்றுக்கெதிரான போராட்டம் மாக்ஸியத்தின் வளர்ச்சிக்கும் பரவலான பயன்பாட்டுக்கும் ஊட்டமளித்தது என்பதும் உண்மையே. மாக்ஸுக்கு முந்திய, பாட்டாளிவர்க்கச் சார்பற்ற சோஷலிஸ சித்தாந்தங்கள் (மாஸ்ஸினி, புரூதோன், பாக்குனின், லாஸல், போன்று பலரால் முன்வைக்கப்பட்டவை) அனைத்துக்கும் எதிராகப் போராட வேண்டிய தேவை மாக்ஸுக்கு ஏற்பட்டது. இதன் மூலமே மாக்ஸால் சர்வதேச பாட்டாளி வர்க்க இயக்கத்தை நிறுவவும் உலகநாடுகளெங்கும் அதன் பரவுதலுக்கு அத்திவாரமிடவும் முடிந்தது. கார்ல் மாக்ஸ் பழைய ஹெகலிய இயங்கியலையும், பழைய பொருள் முதல்வாதத்தையும் விமர்சன ரீதியாக அணுகியதன் மூலம் உருவாக்கிய சித்தாந்தம் அரசியல் பொருளாதாரத்தால் வலுவூட்டப்பட்டது. எனினும் மாக்ஸிய விரோத பிரச்சாரங்களுக்கு பதில் கொடுக்கு முகமாகப் படைத்த நூல்கள் (தத்துவத்தின் வறுமை, ஏங்கல்ஸின் டூரிங்கிற்கு மறுப்பு போன்றவை) மாக்சிஸ கருத்துக்களை தெளிவுபடுத்தி விரிவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தன. இத்தகைய தன்மையை பின்னர் லெனின் (பாட்டாளிவர்க்கப் புரட்சியும் துரோகி கவுட்ஸ்கியும், மக்களின் நண்பர்கள் யாரென்பதும் அவர்கள் எவ்வாறு சமூக ஜனநாயகவாதிகளை எதிர்க்கிறார்கள் என்பதும், போன்றவை), ஸ்டாலின் (எதிர்க்கட்சியினர்பற்றி ஆகியன) மற்றும் இன்றைய காலம்வரை மாக்ஸிய எதிர்ப்புக்குமுகம் கொடுத்ததன் மூலம் மாக்ஸியச் சிந்தனை மேலும் வளம்பெற்று வளர்ந்தே வந்துள்ளது.

மாக்ஸிய எதிர்ப்பு நேரடியான முதலாளித்துவ சிந்தனை வடிவில் வந்தபோது அது மாக்ஸிய இயக்கத்தின் செல்வாக்கை வளர்க்கவே உதவியது என்பதை முதலாளித்துவம் உணர அதிககாலம் செல்லவில்லை. எனவே மாக்ஸிய எதிப்பும் காலவளர்ச்சியுடன் வெவ்வேறு வடிவங்களைப் பெற்றது. மாக்ஸிய நடைமுறையிலிருந்து சந்தர்ப்பவாத நோக்கங்கட்காகப் பிசகி மாக்ஸியத்தை கொச்சைப்படுத்தி திரிபுபடுத்தியவர்களையும் வரட்டுத்தனமானமுறையில் மாக்ஸியத்தை வியாக்கியானம் செய்து இறுதியாகப் பிற்போக்குக்குத் துணைபோன ரொட்ஸ்கியவாதிகள் போன்றவர்களையும் மற்றும் பெயரளவில் மாக்ஸியம் பேசும் நபர்களையும் இயக்கங்களையும் மாக்ஸிய எதிர்ப்பணியுடன் கருதலாமெனினும் இங்கு மாக்ஸியத்தின் இயலாமை, தவறுகள், பற்றாக்குறைகள் மற்றும் கேடுகள் என்ற விதமாக மாக்ஸியத்தைக் கொள்கையளவிலே நிராகரிக்கவும் மறுக்கவும் தூண்டும் பிரச்சாரங்களையும் கருத்துக்களையுமே இக்கட்டுரை கவனத்தில் எடுக்கிறது.

மாக்ஸியம் சித்தாந்த மட்டத்திலே அபிவிருத்தி அடைந்துவந்த காலத்திற்கூட மாக்ஸ் மீது கேவலமான தனிப்பட்ட தாக்குதல்கள் இருந்துவந்தன. அப்போக்கு இன்று வரை தொடர்ந்து வந்துள்ளது. மாக்ஸிய இயக்கம் வளர்ந்து தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவைப் பெற்ற சூழ்நிலையில் பன்முகப்படுத்தப்பட்ட எதிர்ப்பு ரஷ்யப் புரட்சியின் பின் மேலும் உக்கிரமடைந்தது. ஏகாதிபத்திய விரோத காலனித்துவ விரோத இயக்கங்களது வளர்ச்சி பிற்போக்கு சக்திகளைப் பீதியடைய வைத்தது. எனவே அகப்பட்ட எதையெல்லாம் பயன்படுத்த முடியுமோ அதையெல்லாம் பயன்படுத்தினர்கள். ரஷ்யாவில் புரட்சி வெற்றி பெற்றதே மாக்ஸியத்தை மறுத்தாயிற்று (மாக்ஸின் கூற்றுப்படி ஜேர்மனியிலோ இங்கிலாந்திலோ புரட்சி ஏற்பட்டிருக்க வேண்டும்) என்று வாதிட்ட 'அறிஞர்கள்' மாமேதைகளாகப் போற்றப்பட்டனர். மாக்ஸியம் வளர்ச்சி யடைந்துவரும் ஒரு தத்துவம் என்பதையும் அதை லெனின் மேலும் அபிவிருத்தி செய்ததையும் இவர்கள் அறியாதவர்கள் அல்ல. இதே போன்று சீனப்புரட்சி ஒரு விவசாயிகள் புரட்சியேயொழிய தொழிலாளிவர்க்கப் புரட்சியல்ல என்று வாதிட்டார்கள். யூகோஸ்லாவியா 1947ல் சோவியத் யூனியனுடன் முறிவை ஏற்படுத்தியபோது பெருமகிழ்ச்சி கொண்டாடினுர்கள். புரட்சியை அடுத்து ரஷ்யாவில் உள்நாட்டுக்கலவரம் எழுந்தபோது அதை ஊக்குவித்து லெனின் காலத்திலும் ஸ்டாலின் காலத்திலும் ரஷ்யாவின் உள்நாட்டு நிலவரங்களில் தலையிட்டுக் குழப்பமுயன்ற ஏகாதிபத்தியவாதிகள் அந்த நிலவரங்கட்கு முகம் கொடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தவறாக வியாக்கியானம் செய்தனர். இச் சூழலில் சோஷலிச சமுதாயம் தன் முதலாவது நடைமுறை அனுபவத்தில், பகைவர்களின் குறுக்கீடுகளின்கீழ், செய்யநேர்ந்த தவறுகளை எல்லாம் அவற்றின் சூழலினின்று பிரிந்து நோக்கிய புத்திஜீவிகளை எல்லாம் சத்தியதூதர்களாக வர்ணித்தார்கள். மாஜி கம்யூனிஸ்டுகளான ஆதர் கேஸ்ட்லர், மிலோவான் ஜிலாஸ் போன்றவர்களும் போரிஸ் பாஸ்டர்நாக், அலெக்ஸாண்டர் ஸொல்ஸெனிற்ஸின் போன்ற எழுத்தாளர்களும் உயர்த்திப்பிடிக்கப்படக் காரணம் அவர்கள் மூலம் சோஷலிச சமுதாயத்தையும் மாக்ஸியத்தையும் தாக்குவது கூட நம்பகமாக இருந்தது என்பதே.

சோஷலிச சமுதாயத்தில் குறைபாடுகளோ தவறுகளோ இருக்காது என்று யாரும் கூறுவதற்கில்லை. ஆனால் அது மாக்ஸிய சித்தாந்தத்தின் கோளாறு. சோஷலிசத்தின் நடைமுறைச் சாத்தியமின்மையின் வெளிப்பாடு என்ற விதமாக அக்குறைகளும் தவறுகளும் வியாக்கியானம் செய்யப்பட்டது மிகவும் விஷமத்தனமானது. மாக்ஸிய விரோத விமர்சகர்களது அணுகுமுறை எப்போதுமே ஒரே விதமானதாக இருக்கவில்லை.

சிலர் மாக்ஸியம் நல்லதுதான் ஆனால் மனிதசுபாவம் நல்லதல்ல. ஆகவே மாக்ஸியம் நடைமுறைக்கு ஒத்துவராது என்று வாதிப்பார்கள். 2000-4000 வருஷ காலமாக இருந்த மதங்களைப் பற்றிப் பேசும்போது அவர்கட்கு இந்த நினைவுகள் எழுவதில்லை. இதே வாதத்தைச் சிறிது மாற்றிவேறுசிலர் கம்யூனிஸ்ட்டுகள் யோக்கியர்களாக இல்லாததால் மாக்ஸியம் தோல்வி அடைகிறது என்று நினைகிற ஆட்டுக்காக அழுகிற ஓநாய் மாதிரி அங்கலாய்ப்பார்கள். இவர்களிடம் கம்யூனிஸ்ட்டுகளல்லாதவர்களில் எத்தனை வீதம் நல்லவர்கள் என்று யாரும் கேட்கக் கூடாது. இவர்கள் மதகுருமார், மடாதிபதிகள், மற்றும் ஆஷாடபூதிகளது பிழைகளை எல்லாம் கண்டும் காணுததுபோல் இருப்பார்கள். ஆனல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தவன் மட்டும் முற்றும் துறந்த முனிவனுக இருக்கவேண்டும். ஒரு சிவப்புச்சட்டைக்காரன் பிழை விட்டாலோ கம்யூனிஸ்ட்கட்சிக்காரர்களே இப்படித்தான் என்று அழுது வடிப்பார்கள். ஒரு கம்யூ-

## தேசபக்தன்

னிஸ்ட் கட்சி தன் உறுப்பினரிடம் எதிர்பார்க்கும் நேர்மை, நாணயம், விசுவாசம் என்பன நம் சூழலில் சராசரி மனிதனிடம் எதிர்பார்க்கக்கூடியதைவிட அதிகமானது என்பது உண்மைதான். ஆயினும் ஒரு கட்சி எவ்வாறு தன் உறுப்பினர்களது தவறுகளை உதாசீனம் செய்யக் கூடாதோ அதே அளவுக்குத் தன் உறுப்பினர்கள் வாழும் சமுதாய அமைப்பு, அச் சமுதாயத்தின் வரலாற்றுப் பின்னணி, அந்த உறுப்பினரது தனிப்பட்ட பிரச்சினைகள் ஆகிய பல விஷயங்களையும் கணிப்பிலெடுத்து அவரது குறைகளை நீக்கி அவரை மேலும் உயர்த்த வேண்டும் என்பதை மறப்பதற்கில்லை. இதுவே ஒரு நல்ல கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மறுபுறம் பிழைகளைப் பூசிமெழுகும் சந்தர்ப்பவாத ஸ்தாபனங்கட்கும் வரட்டுவாத மாக்ஸிய சன்னியாசி மடங்களுக்குமுள்ள வேறுபாடு. மாக்ஸியத்தின் பேரால் எவர் தவறு செய்தாலும் அதையெல்லாம் கம்யூனிஸ சித்தாந்தத்தின்மீதும் நடைமுறைமீதும் சுமத்துவது மிகவும் மலிந்துவிட்ட ஒரு நடைமுறையாகிவிட்டது.

மாக்ஸியச் சித்தாந்தத்தின் போதாமை பற்றிய ஆராய்வுகள் புத்திஜீவிகளுக்கு என்றே வழங்கப்படும் மாத்திரைகள். மாக்ஸியம் பொய்ப்பிக்கப்பட்டுவிட்டது என்று வாதிப்பதில் கால் பொப்பர் போன்ற மெய்யியல் நிபுணர்களின் வாதங்கள் காலத்துக்குக் காலம் புதுப்பிக்கப்பட்டு வருவன. மாக்ஸியத்தை வரட்டுத்தனமாக வியாக்கியானம் செய்து அதன் அடிப்படையில் சில முடிவுகளை வந்தடைந்து அவை பிழையாகிவிட்டதால் மாக்ஸியமும் பிழையாகிவிட்டது என்ற வகையிலேயே இவர்களது வாதங்கள் அமைவன. கால் பொப்பர் ஒரு சிறந்த சிந்தனையாளர் என்பதும் அவர் விஞ்ஞான அறிவு பற்றி செய்துள்ள சிறந்த ஆராய்வுகளும் அவரை மேற்கோள்காட்டி மாக்ஸியத்தை எதிர்ப்பதை மிகவும் வலிவூட்டியுள்ளன. ஆயினும் மாக்ஸியம் பற்றி அவரது ஆராய்வின் ஒருதலைப்பட்சமான தன்மையை அவதானித்தால் மாக்ஸியத்தின் எதிரிகள் அவரை மேற்கோள் காட்டத் தகாத விஷயத்தில் மேற்கோள் காட்டுவதை நாம் உணரலாம்.

அண்மைக் காலத்தில் மாக்ஸியத்தை எதிர்க்க நம் சூழலில் இன்னொரு புதிய ஆயுதம் உருவாக்கப்பட்டுள்ளது. அது மாக்ஸியம் பொருள் முதல்வாதத்துக்குட்பட்ட அளவில் பூரணமாகச் செல்லுபடியானதுதான் என்றாலும் மனிதனது ஆத்மீகத் தேவைகளை அது அசட்டை செய்கிறது என்று கூறி மாக்ஸியத்தைக் கடந்து செல்வதாகக் கூறும் போக்காகும். இவர்களது நோக்கமும் மாக்ஸியத்தை எதிர்ப்பதேயாகும் ஆயினும் அதை நேரடியாகச் சொல்லத் தைரியம் இல்லாமல் ஆத்மீகப் போர்வையால் தம்மை இழுத்து மூடிக்கொள்கிறார்கள். இன்றும் கூட மாக்ஸியத்துக்கு இந்திய மாற்றுத் தத்துவங்களைத்தேடும் முயற்சி நடக்கவே செய்கிறது.

மாக்ஸிசத்தை எதிர்ப்பவர்கள் அதனை எதிர்ப்பதில் தமக்கு அகப்பட்ட எந்த ஆயுதத்தையும் பிரயோகிக்கத் தயங்குவதில்லை. போலந்து, செக்கோஸ்லவாக்கியா, ஆப்கனிஸ்தான் போன்று பலவேறு சூழல்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் மாக்ஸிய கொள்கையினின்று வழுவியதால் ஏற்பட்டவை என்பதையும், வேறும் பல இடங்களில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு மூலகாரணமாக ஏகாதிபத்தியவாதிகளே இருந்தார்கள் என்பதையும் மறைத்துவிடுகிறார்கள்.

மாக்ஸியத்தின் எதிரிகளைக் கையாள்வதில் மாக்ஸிய வாதிகள் விடும் தவறுகளும் சிலவேளைகளில் எதிரிகட்கு வசதியாக அமைந்துவிடுகிறது. தம்மை மாக்ஸியவாதிகள் என்று கூறிக்கொள்வோரின் வரட்டுவாதத்தையும் வெறுமையையும் சில சமயங்களில் மாக்ஸியவாதிகள் நேசத்துடன் அடையாளம் காண்பதற்குத் தவறுவதும் மாக்ஸிய எதிர்ப்பாளர்களது கையில் ஆயுதமாகிவிடுகிறது.

மாக்ஸியத்தை எதிர்ப்போர் என்ன நோக்கத்துக்காக எதிர்க்கிறார்கள், அவர்களது வர்க்க அடிப்படை என்ன என்பதைப் புரிந்துகொள்வதும் அவர்களது வாதங்கள் தவறான நபர்கள் வாயினின்று வருவதால் எல்லாமே தவறு என்றும் எதிர்க்க வேண்டியன என்றும் மாக்ஸியவாதிகள் எண்ண வேண்டியதில்லை. அதேபோல் தம்மைத்தாமே மாக்ஸியவாதிகள் என்று அறிமுகப்படுத்துவோர் கூறும் யாவுமே மாக்ஸியத்துக்கு உடன்பாடான விஷயங்களும் இல்லை. சிலரால் விஷமத்தனமாகவே மாக்ஸியக் கருத்துக்கள் திரித்துக் கூறப்படுவதும் சூழ்நிலைக்குப் பொருந்தாதவாறு பிரயோகிக்கப்படுவதும் நாம் அறிந்தவை.

மாக்ஸியம் நடைமுறை சார்ந்த ஒன்று அதன் சித்தாந்த அடிப்படை, ஆய்வு முறை, இலக்கு என்பன பற்றிய அடிப்படைத் தெளிவும் அச்சமின்றி யதார்த்தத்துக்கு முகங்கொடுக்கும் துணிவும் நிலவரங்களைச் சரியாக மதிப்பிட்டு நிதானமாகவும் உறுதியாகவும் செயற்படும் திறமையும் உள்ளவரை மாக்ஸியவாதிகள் எதிரிகளின் சூழ்ச்சிகள் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. ★

## சீனக்கட்சியும் இந்தியக்கட்சியும்

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் (மாக்சிஸ்ட்) பதினைந்து வருடங்களுக்குப் பின் மீண்டும் தம்முள் உறவை ஏற்படுத்திக் கொண்டன. அண்மையில் இந்தியக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் இ. எம். எஸ். நம்பூதிரிபாத் தலைமையில் சீனுவுக்கு சென்ற தூது கோஷ்டிக்கும் சீனக்கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் ஹூயாபாங் தலைமையிலான குழுவினரும் விரிவான தமது பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் மேற்படி உறவு ஏற்பட்டது.

இந்தியக் கட்சித் தூதுகோஷ்டியை வரவேற்ற விருந்துபசாரத்தில் சீனக்கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் ஹூயாபாங் உரையாற்றும் போது கீழ்க்கண்டவாறு கூறினுர். ''இரு கட்சிகளின் உறவுகளும் ஒத்துழைப்பு, பரஸ்பரமதிப்பு, சுதந்திரம் என்ற அடிப்படையில் இருக்கவேண்டும். சுதந்திரம் இன்றி ஏனைய விடயங்கள் அனைத்தும் அர்த்தமற்றதாகிவிடும். எம்மைப் பொறுத்த மட்டில் சுதந்திரம் என்பது ஒரு கட்சி தனது சொந்த நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் பொறுப்பாய் இருத்தல் என அர்த்தப்படும்'' என்று கூறினுர். மேலும் அவர் சீனக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையை விளக்குகையில் ''சீனு என்றுமே மேலாதிக்கத்தை நாடாது. அதிகாரத்தில் உள்ள ஒரு கம்யூனிஸ்ட்கட்சி மேலாதிக்கத்தை நடைமுறைப் படுத்தினுல் அது சோஷலிசத்திற்கு ஊறு விளைவிப்பதுடன் நில்லாது. அதிகாரத்தில் இல்லாத கட்சிகள் மக்களுடன் தொடர்பு கொள்வதில் கஷ்டங்களை உருவாக்கி விடும். சோவியத் அமெரிக்க மேலாதிக்கத்தை சீனு எதிர்க்கின்றது. சீனுவிற்கு எந்த ஒரு அயல்நாட்டு மண்ணின் மீதும் ஆசைகிடையாது'' என்றும் வலியுறுத்திக் கூறினுர்.

# இரு போராட்டத் தோழரிடையே:

**கலை இலக்கிய அரங்கு**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### 6. இதயத்திலிருந்து பிறந்த அமைதியான உணர்வுகள்:

சொங்கிங்கிலிருந்த எட்டாம் மார்க்கப் படையின் அலுவலகத்தில் சௌஎன்லாயும் டெங்யின்சௌவும் பணிபுரிந்த காலங்களில் சௌஎன்லாயின் தந்தையாரும் டெங்கின் தாயாரும் உடன் இருந்தனர். அவர்கள் திருமதி லியூவுக்குச் சொந்தமான வீட்டின் மேல்மாடியில் வசித்தார்கள். அவர்களோடு அலுவலகத்தில் பணிபுரிந்த எல்லாத் தோழர்களும் இம் முதியோர் மீது அன்பு செலுத்தினார்கள்—ஜப்பானியரின் குண்டு வீச்சுக் காரணமாக இவர்கள் சிங்கௌ என்ற இடத்திற்கு மாற்றப்பட்டார்கள். உடன்பணிபுரிந்த தோழர் சாங்யிங்கும் சுகவீனம் காரணமாக இவர்களோடு சென்றிருந்தார். சாங்யின் புறப்படுமுன், டெங்யின்சௌ அவரை அணுகி, தமது கணவரின் தந்தையார் மீது விசேஷ கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொண்டார். உலாவச் செல்லும் போதும், செஸ் விளையாடும்போதும் யாராவது ஒருவர் அவரோடு துணையாயிருக்க வேண்டும். அப்போதுதான் அவர் மனமகிழ்வுடன் இருப்பார். அவரை நன்றாகப் பராமரித்தால்தான் சௌஎன்லாயும தந்தையாரைப் பற்றிய கவலையை விடுத்து நிம்மதியாகத் தம் பணிகளைக் கவனிப்பார். என்று கூறினார். மனைவியின் தாயார்மீது கூடிய கவனம் செலுத்தும்படி சௌஎன்லாய் சாங்யிங்கை இரகசியமாகக் கேட்டுக்கொண்டார்.

சௌஎன்லாய் தமது மனைவியின் தாயாரைப்பற்றிக் குறிப்பிடும் போது, ''இவர் சுதந்திர உணர்வுடைய புரட்சிப்பெண். தம்மீது மற்றவர்கள் அக்கறை செலுத்துவதை விரும்புவதில்லை. இருண்ட பிறகு வீட்டுக்கு வெளியே இவர் செல்வதானால் பாதையில் வழுக்கி விழாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் இவருடைய கண் பார்வை மந்தமானது. ஆகையால் அதிகநேரம் புத்தகம் வாசிக்க விடக்கூடாது. நேரமிருந்தால் இவருக்குப் பத்திரிகைகளை வாசித்துக் காட்டுங்கள்'' என்றார்.

சொங்கிங்கில் பணிபுரிந்த சகல தோழர்களுக்கும் சௌஎன்லாய் தமது மனைவியின் தாயார்மீது செலுத்திய அன்பின் பரிமாணம் நன்கு தெரியும். டெங்யின் சௌவின் தாயார் முற்போக்குச் சிந்தனையுடையவர். தமது இளம் பருவத்திலிருந்தே நாட்டின் எதிர்காலம் ஒளி பொருந்தியதாய் அமையவேண்டுமென்பதில் விருப்பம் கொண்டிருந்தார். மகள் டெங் சென்றவிடமெல்லாம் உடன் சென்றார். ஷாங்காயில் சௌஎன்லாய் தம்பதிகளோடு தங்கியிருந்தார். மத்திய சோவியத் பகுதியைச் சார்ந்த ஜியாங்சி மாகாணத்தில் 1920 முதல் 1930 வரை காயமுற்ற செம்படையினருக்கு கிசிச்சையளிக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்தியிருந்தார். சௌஎன்லாயும் டெங்யின் சௌவும் நீண்ட படைநடைப்பில் ஈடுபட்ட சமயம் இவர் கொமின்டாங் சிறையில் இடப்பட்டிருந்தார். சௌஎன்லாயையும் டெங்யின் சௌவையும் பொதுவுடமைக் கட்சியிலிருந்து வெளியேறும்படி கேட்டுக் கடிதம் எழுதும்படி கொமின்டாங் பிற்போக்குவாதிகள் இவரை வற்புறுத்தினார்கள். ''தளபதி சியாங்காய் ஷேக்கால் கூடத் தமது மகனைக் கட்டுப்படுத்த முடியவில்லை (அவர் மகன், சியாங் ஜிங்குவோ, அந் நாட்களில், அவருடைய விருப்பத்திற்கு மாறாக ரஷ்யாவில் கல்வி கற்றுவந்தார்) அப்படியிருக்க, முதியவளான என்னால் எப்படி எனது பிள்ளைகளின் விவகாரத்தில் தலையிட முடியும்?'' என மிகவும் அமைதியாகவே கூறிச் சமாளித்தார் இந்த வீரப் பெண்மணி.

சௌஎன்லாய் இம் முதியவரை மதித்தது தமது மாமியார் என்பதற்காகவல்ல. உண்மையான போராட்டத் தோழர் என்பதற்காகவே தான். சொங்கிங்கில் தமது தாயார் கடும் நோயால் அவதியுற்றபோது டெங்யின்சௌ சென்று உதவிபுரிந்தார். புரட்சிப் பணிகள் காரணமாக வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தமையால் டெங்யின்சௌ தமது தாயார் உயிர்நீத்தபோது அருகிலிருக்கவில்லை. இறுதிச் சடங்குகள் நடந்து கொண்டிருந்த போது தான் தம்பதிகள் இருவரும் வந்தனர். வெளிப்படையாக எதனையும் காட்டிக்கொள்ளாதபோதிலும் சௌஎன்லாய் பெரிதும் வேதனைப்பட்டார். தமது குடும்பத்தின் பெரிய இழப்பிற்குத் துன்பப்பட்டுக்கொண்டிருந்த மனைவியின் அருகில் நின்றபடி அமைதியான முறையில் அஞ்சலி செலுத்தினார் சௌஎன்லாய். அங்கு குழுமியிருந்த தோழர்களனைவரும் மௌனமாகவேயிருந்தபோதிலும் அழுதுவிட்டார்கள். சேர்ந்தே வாழவும் இறக்கவும் சங்கற்பம் கொண்ட தம்பதிகளுக்கு ஒன்றுமே பேசவேண்டிய தேவை ஏற்படவில்லை. அவர்களிடையே நிலவிய நெருக்கமும் இதயபூர்வமாகச் செலுத்திய அமைதியான அனுதாபமுமே போதியதாயிற்று.

### 7. மகிழ்வூட்டிய ஒரு கோப்பை மது:

சௌஎன்லாயும் பெரும்பாலான தோழர்களும் சொங்கிங்கிலிருந்து யெனானிற்குச் சென்றுகடமைபுரியும்படி 1943ம் ஆண்டு கட்சியின் மத்திய குழு ஆணையிட்டது. இக்கால கட்டத்தில் பொதுவுடமைக் கட்சிக்கும் கொமின்டாங்கிற்கும் உறவில் நெருக்கடி நிலை உருவாகியிருந்தது. எந்நேரம் எது நடக்குமோ என்று தெரியாத நிலையில் நாடு இருந்தது. ஒருசில தோழர்களை மட்டும் சொங்கிங்கில் தொடர்ந்து வேலை செய்துவந்தார்கள். ஜனநாயகப் பிரமுகர்களை ஒருங்கிணைப்பது, எட்டாம் மார்க்கப் படையை திருத்தியமைப்பது, சொங்சிங்கிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த பொதுவுடைமைப் பத்திரிகையான ''சின்வா தினசரி'' ஆகியவை சௌஎன்லாயைப் புறப்படுமுன் மிகவும் சுறுசுறுப்பாக வைத்திருந்தது. வேலைச்சுமை காரணமாக அவருக்கு உண்ணவோ உறங்கவோ நேரமிருக்கவில்லை. சொங்கிங்கில் தங்கியிருக்கப் பணிக்கப்பட்ட தோழர்கள் தங்கள் சிரமங்களுக்கிடையே சௌஎன்லாய் புறப்படுமுன் விருந்துபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

## தோழர்கள் சௌஎன்லாய்-டெங்யிங்சௌ வாழ்வில் நடந்த சில சம்பவங்கள்

தமிழில்:
**க. நடனசபாபதி**

விருந்திற்கான சகல ஏற்பாடுகளையும் முடித்தபின்னர் மேல்மாடியில் வேலைசெய்து கொண்டிருந்த சௌஎன்லாயிற்காகக் கீழ்மாடியில் மிகவும் அமைதியாகக் காத்திருந்தார்கள். விருந்து ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து தோழர்கள் அவரை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதனைக் கூற டெங்யின் சௌ மேல்மாடிக்குச் சென்றார். சற்று நேரத்திற்குப் பிறகு மீண்டும் சென்று பார்த்தார். பிரதம விருந்தினர் எழுந்துவந்த பாடாய் இல்லை. நீண்டநேரமாகத் தோழர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பதனால் மூன்றாம் முறையும் மேல்மாடிக்குச் சென்று பார்த்தார் வேலைச்சுமையில் மூழ்கியிருந்தமையால் அவர் இறங்கி வருவதாகவேயில்லை. ஆகவே இறங்கிவந்து தோழர்களோடு சேர்ந்து தாமும் காத்துநின்றார். குறுகிய காலக்கெடுவுக்குள் எதிர் நோக்கியுள்ள சகல முக்கிய பணிகளையெல்லாம் முடிக்க வேண்டியிருந்ததனால் டெங்யின் சௌ அவரைக் குழப்ப விரும்பவில்லை. அவருக்கு மிகவும் சங்கடமாகத்தான் இருந்தது. இறுதியாக சௌஎன்லாய் இறங்கிவந்த போது எதிர்பார்த்துக் காத்திருந்த அனைவரிடமும் மன்னிப்புக்கோரினார். உடனே எல்லோருடைய முகங்களிலும் களை தட்டியது. தம்மிடமிருந்து விடைபெறும் சௌஎன்லாயுடன் சேர்ந்து விருந்துண்டனர். அனைவரும் மகிழ்வுடன் சிறு கோப்பைகளில் மதுவருந்தினர். எல்லோருமே பூரிப்புடன் காணப்பட்டார்கள்.

### 8. நள்ளிரவில் தொலைபேசியில் அழைப்பு

நாடு விடுதலை பெற்ற பிறகு சௌஎன்லாயின் தோழர்கள் பாடிய பாடலொன்றின் வரியொன்று;-

''நித்திரை கொள்ளத் தெரியாதசிவன் யார்தெரியுமா?
எமது அன்புக்குரிய பிரதமர் சௌஎன்லாய் தானல்லவோ''

இருபதுகளில் புரட்சி ஆண்டுகளில் குவாங்சௌங்கிலிருந்த போதும், முப்பதுகளில் கொமின்டாங் பயங்கர ஆட்சி காலங்களில் ஷாங்காயிலிருந்த போதும், நாற்பதுகளில் எட்டாம் மார்க்கப் படையின் சொங்கிங் அலுவலகத்தில் இருந்தபோதும், விடுதலைக்கு முன யெனானிலும், நான்ஜிங்கிலும், இருந்தபோதும், மற்றெவரையும் விட சௌஎன்லாய் தான் மிகவும் குறைவான அளவு நேரம் உறங்குவாரென்பதை அனைவருமே அறிவார்கள். விடுதலைக்குப் பின் பீஜிங்கில் கட்சியின் மத்திய குழு அமைந்திருந்த சொங்ஞான் ஹாயிலும் இதே நிலை தான் தொடர்ந்தது. இரவு முழுவதும் சௌஎன்லாயின் அறையில் விளக்கு எரிந்தபடியிருந்தது. வாழ்நாள் முழுவதும் மக்களுக்காக அயராது உழைத்தார். அவரையும் அவர் அயராது உழைத்துவந்த விதத்தையும் நன்கு அறிந்தவர் அவருடைய துணைவியரே. வேலைச்சுமையால் சோர்ந்த முகத்தையும், சிலச்சில சந்தர்ப்பங்களில் நேரங்கிடைக்கும்போது ஆழ்ந்த உறக்கத்தில் ஈடுபடுவதையும் கண்ணுறும்போது மற்றத் தோழர்கள் போலவே டெங்யின் சௌவின் உள்ளமும் வேதனைப்படும். நவசீனா உருவானதும் பிரதமர் என்ற முறையில் சௌஎன்லாய் முடிவே இல்லாதபடி தேசப் பணிகளில் ஈடுபட்டு வந்தார். அவர்பொதுவாகத் தினமும் பத்துமணி நேரத்திற்கு மேலாகவும், சிலதினங்களில் இருபது மணிநேரங்கூட கடமை புரிந்து வந்தார். அநேகநாட்கள் அவர் இரவும் பகலும் உறங்காமல் இருந்து பணிபுரிந்ததும் உண்டு. சௌஎன்லாய் மீது சுமத்தப்பட்டிருந்த வேலைச்சுமையைப் பற்றி டெங்யின்சௌ நன்றாகத் தெரிந்திருந்தார். அதேசமயம் அதனால் அவருடைய உடலாரோக்கியம் எவ்வளவுதூரம் பாதிக்கப்படுகிறது என்பதனையும் அறிந்திருந்தார். நள்ளிரவு நேரங்களில் அவருடைய அறைவாசலருகே சென்றோ, அல்லது அவருடைய அறைக்குள் நடந்தோ உறங்கச் செல்லவேண்டியநேரம் நெருங்கிவிட்டதென்பதை நினைவூட்டுவார். அந்நேரங்களில் சௌஎன்லாய் தலையை அசைப்பார் அல்லது புன்னகை புரிவார்.

ஒரு நள்ளிரவு நேரம் தொலைபேசி ஒலித்தது. தோழர் லியூஅங்கிற்கும் மற்றவர்களுக்கும் அன்று இரவு வேலை. ஒப்பரேட்டருக்குச் சங்கடமாயிருந்தது. பிரதமரோடு தொலைபேசித் தொடர்பு கொள்ள விரும்பியவர் டெங்யின்சௌ. உடனடியாகத் தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கலாமா? லியூ அங்கிக்கோ யாரிடமிருந்து எதற்காக எடுக்கப்பட்டது என்பது தெரியும். ஆகவே உடனடியாகவே தொடர்பை ஏற்படுத்தும்படி பணித்தார். சௌஎன்லாய் தொலைபேசியை எடுத்து, ''ஆம் தெரியும், ஆம் தெரியும்'' என்றார் இதுதான் டெங்யின்சௌ அவரை உறங்கச்செல்லும்படி கூறப்பயன் படுத்தும் முறையாகும்.

சிலநேரங்களில் அவரைத் தம் உடல்நிலையில் சிறிது கவனம் செலுத்தும்படி கேட்டுத் துண்டொன்றைக் கொடுப்பார். அவருடைய உடல்நிலை பாதிக்கப்பட்டுவிடுமோ என அஞ்சி தமக்குத் தடிமனோ சுகவீனமோ உள்ள போது தம்மைச் சௌஎன்லாயிடம் இருந்து விலகிக்கொள்வார். சௌஎன்லாய் அறைவாசலுக்கு வந்து சமாதானமாகச் சில கூறுவார். சௌஎன்லாய் படுக்கவரும் போதெல்லாம் டெங்யின்சௌ ஆழ்ந்த உறக்கத்திலிருப்பார். தமது சகாக்களுக்கும் அமைதியாக இருக்கும்படி கூறிவிட்டுத் தாமும் ஓசைபடாமல் அறைக்குள் நுழைவார்.

சௌஎன்லாயின் வேலைகளோ என்றுமே முடிவதாயில்லை. இருவரும் தமக்குள்

(7-ம் பக்கம் பார்க்க)

## அடுத்த இதழில்

எமது கடந்த இதழில் கோவிந்தன்: மற்றொரு நாய்க்கதை என்ற தலைப்பில் டானியலின் கோவிந்தன் நாவலுக்கு ஒரு விமர்சனம் வெளிவந்ததை வாசகர்கள் அறிவர். அதே நாவலுக்கு மற்றுமொரு விமர்சனம் செம்பதாகைக்கு கிடைத்துள்ளது. அடுத்த இதழில் அவ்விமர்சனம் வெளிவர உள்ளது, இவ்விரு விமர்சனங்கள் பற்றிய தமது கருத்துக்களை வாசகர்களிடமிருந்து செம்பதாகை எதிர்பார்க்கின்றது.

(ஆர் — குழு)

## பாட்டன் பரம்பரை

பலநூறு ஆண்டுகள் முன் பண்ணிவைத்த கோபுரத்தை
அண்ணாந்து பார்த்து அதை அதிசயித்து உன்மனதுள்
பாட்டனுக்குப் பாட்டனுக்குப் பாட்டனுக்குப் பாட்டனவன்
பண்ணியவன் என்றெண்ணிப் பரவசித்து நிற்பவனே,
பழைய பரம்பரையில் பாட்டன்மார் பலபேர்காண்.
கல்லுடைத்த பாட்டன்மார் கல்சுமந்த பாட்டன்மார்
பேருனக்குத் தெரியாது.
ஆராரோ தேரேறி வீதிவலம் வருவதற்காய்க்
கையிழந்த பாட்டன்மார் கண்ணிழந்த பாட்டன்மார்
காலொடிந்த பாட்டன்மார் கதையுனக்குத் தெரியாது,
கதைமுடிந்த பாட்டன்மார் கணக்குனக்குத் தெரியாது.
கோபுரத்தில் பேர்பொறித்துக் கொலுவிருந்த மன்னரிடை
பாட்டன் உனக்கொருவன் எவனிருப்பான் என்றெண்ணிச்
செல்லரித்த ஏடுகளைத் தேடுகிற பைத்தியமே!
பணக்கார உறவுகளைப் பழமையிலும் நாடுகிறாய்.

— சேகர்

# புதியதோர் போராட்டப் பாதையினாலேயே தோட்டத்தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்

## இ. தே. ப. வா. இயக்க வேலைத்திட்ட கூட்டத்தின் அறைகூவல்

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் போராட்ட பாரம்பரியம் உடையவர்கள் என்பது வரலாற்றுகால தொழிற்சங்க போராட்டங்களிலிருந்தும், ஆங்காங்கு நடைபெற்ற வெகுஜன போராட்டங்கள் மூலமாகவும் தெட்டத் தெளிவாகிறது. எனவே ஒரு புதிய போராட்டப் பாதையில் சகல மக்களும் முன்னேறுவதன் மூலமே ¡வெறும் அறிக்கை தீர்மானங்களாக வந்துள்ள அடிப்படை ஜீவாதார உரிமைகளான பிரஜாவுரிமை, மாதச்சம்பளம், சம சம்பளம், இருப்பிட கல்வி வசதி போன்ற இன்னோரன்னவற்றை வென்றெடுக்க முடியும் என்பது சமகால அத்தியாவசிய தேவையாகும். இது குறுகிய பிரதேசவாத இனவாத உணர்வுகளுக்கப்பாற்பட்ட நேர்மையான பாட்டாளிவர்க்க அரசியல் இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதன் மூலமே சாத்தியமாகும், என்று இலங்கை தேசபக்த வாலிபர் இயக்க மலையகப் பிரதேச முதலாவது நாநாட்டின் இரண்டாவது விரிவுபடுத்தப்பட்ட வேலைத்திட்ட கூட்டத்திற்கு தலைமைவகித்த தலைமைக்குழுவிலிருந்து தலைமையுரை வழங்கிய தோழர் இ. தம்பையா வலிவுறுத்தினர். தலைமைக் குழுவில் தோழர்கள் எஸ். இராஜேந்திரன், எம். பத்மநாதன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

மேற்படி கூட்டம் அட்டன் செட்டிக் மண்டபத்தில் கடந்த 29-05-83 அன்று முழுநாள் கூட்டமாக நடைபெற்றது. இக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் மார்க்க வேலைத்திட்ட அறிக்கையில் பாஸிஸ யூ. என். பியின் மக்கள் விரோத செயலுக்கு எதிராக ஒரு தேசம் பரந்த ஐக்கிய இயக்கத்தை கட்டி வளர்ப்பது தேவையாகும் என்பதுடன் இதில் மலையக மக்களின் பங்கு முக்கியமானது என்பதும் கூறப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதில் கலை இலக்கிய வேலைத்திட்ட அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன் கலை இலக்கிய வேலையின் இன்றைய கடமை பற்றிய சிறப்புரையும் நிகழ்த்தப்பட்டது.

இக்கூட்டத்தில் நிதியறிக்கை ஸ்தாபன வேலைத்திட்ட அறிக்கை என்பவற்றுடன் முதலாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் மலையக மக்களின் பிரச்சினைகளை வென்றெடுப்பதற்கான வெகுஜன வேலைத்திட்ட அறிக்கை என்பனவும் சமர்ப்பிக்கப்பட்டு பிரதிநிதிகளால் நன்கு விவாதிக்கப்பட்டது. இவ்விவாதத்தில் கடந்தகாலங்களில் தத்தமக்கும், தமது பகுதிகளுக்கும் கிடைத்த இயக்க அனுபவங்களை அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

மேலும் இக்கூட்டத்தில் அரசியல் தத்துவார்த்த விடயங்கள் பற்றி சிறப்புரை வழங்கிய தோழர் இரவீந்திரன் தனதுரையில் 'ஒரு அரசியல் இயக்கத்துக்கு அரசியல் மார்க்கம், தத்துவார்த்தம், ஸ்தாபனம் என்பன அவசியமாகின்றன. எனவே எம்மிடம் பாட்டாளிவர்க்க அரசியல் மார்க்கத்துடன், மாக்சிச லெனினிஸ மாசேதுங் சிந்தனையுடன் கட்டமைப்புக் கொண்ட அரசியல் ஸ்தாபனமான இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கமும் உள்ளதில் தெளிவுறுவோம்' என்று குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில் அடிப்படையானதும் சரியானதுமான அரசியல் கோட்பாடு இல்லாத எந்த இயக்கத்தாலும் மக்களுக்கு சுயநலமற்ற சேவையை ஆற்ற முடியாது. தத்துவத் தெளிவு கொண்ட அரசியலை முதன்மைப் படுத்தும் மக்கள் இயக்கத்தின் மூலமே எதுவும் வெற்றியடைய முடியும் என்பதால் நாளாந்த வெகுஜன போராட்டங்கள் முன்னெடுப்பதுவும் எமது அத்தியாவசிய தேவையாகும்' என்று குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் மலையகத்தின் பல பாகங்களிலிருந்தும் இயக்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தொழிலாளர்களைத் துரத்துவதுதான் — தார்மீகம்!

மகாவலி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் இயங்கும் கொத்தமலை நீர்த்தேக்கத்தால் அப்பகுதியில் காணிகள் இழக்கும் சிங்கள மக்களுக்கு அருகில்உள்ள ஹராங்கல என்னும் தோட்டத்தைப் பிரித்துக் கொடுத்துள்ளார்கள். ஆனல் இத்தோட்டத்தில் பல்லாண்டுகளாக இருந்து வந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூபா 2000/- பணத்தைக் கொடுத்து வேறு தோட்டங்களில் சென்று வேலை செய்யுமாறு துரத்தி விடுகின்றனர். இதுதான் தார்மீக ஆட்சியானது தோட்டத் தொழிலாளர்களை நடத்தும் முறையாகும்.

இவ்வாறு துரத்தப்படும் தொழிலாளர்களுக்கு கிள்ளிப்போட்ட இரண்டாயிரம் ரூபா எந்த மூலைக்குப் போதுமானது? வேறு தோட்டங்களைத் தேடி அலைந்து, தமது பொருட்களை ஏற்றி இறக்கி புதிய இடத்தில் வேலை தொடங்க இந்தப்பணம் போதாது. அதுமட்டுமல்ல பிரசாவுரிமை இல்லாதவர்களுக்கு வேறுதோட்டங்களில் வேலையே கொடுக்க மறுக்கிறார்கள். இதனால் ஒருபகுதி தொழிலாளர் நடுத்தெருவில் நிற்கவேண்டியுள்ளது. இதுபற்றி ஆட்சியை பாதுகாக்கும் அமைச்சர் தொண்டமானோ அன்றி தொழிற் சங்கமோ நடவடிக்கை எதையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தகதை போன்றே தோட்டத் தொழிலாளர்களின் நிலை இன்று உள்ளது.

இதேநிலை திஸ்பனை என்னும் தோட்டத்திலும் உருவாகி உள்

8-ம் பக்கம் பார்க்க

### போகந்தலாவை தொழிலாளர் தாக்கப்பட்டனர்

# ஐக்கிய உணர்வு எதிரொலித்தது

இன்று பாதுகாப்புப் படையிலோ அன்றி காவல்படையிலோ ஒருவர் இருந்தால் அவர் மக்களுக்கெதிராக எதையும் செய்துவிட்டுப் போகலாம் என்ற நிலை இன்றைய ஆட்சியில் உருவாகி உள்ளது. கடந்த 1-6-83 அன்று போகந்தலாவை கடைவீதியில் ரீ. வி. படம் பார்த்துக் கொண்டிருந்த பெரும் தொகையான தொழிலாளர்களை ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தர் திடீரெனத் தாக்கத் தொடங்கிய சம்பவம் இடம்பெற்றது. இரு இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராற்றை சாட்டாகவைத்து பெருந்தொகையான பார்வையாளர்கள் தாக்கப்படக்காரணம் என்ன? அந்த பொலிஸ் உத்தியோகஸ்தரின் மயக்க நிலையா? அல்லது அதிகாரமிடுக்கா? அப்பாவித் தொழிலாளர்கள் என்ன ஆடுமாடுகளா? இந்த வெறிச்செயலுக்கு தொழிலாளர்கள் உடனேயே உரியபாடம் புகட்டினர். அதுமட்டுமன்றி அந்த பொலீஸ் உத்தியோகஸ்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி ஐக்கியப்பட்ட வேலைநிறுத்தத்திலும் தொழிலாளர் இறங்கினர். இச்சம்பவத்தில் தொழிலாளர்களின் அடக்குமுறைக்கு எதிரான ஐக்கியப்பட்ட போராட்ட உணர்வின் வெளிப்படுத்தலைக் காணமுடிந்தது.

4-ம் பக்கத்தொடர்

தேச மாக்சிச உண்மைகளை தமது நாடுகளின் புரட்சியின் ஸ்தூலமான நடைமுறைக்கு ஏற்ப ஒருங்கிணைத்துக்கொள்கின்றனர். பல்வேறு நாடுகளின் கட்சிகளுக்கிடையே உறவை எவ்வாறு சரிவர கையாள்வது என்ற குறிப்பான புரட்சிப் பாதையை மேற்கொள்வது என்பதில் வெவ்வேறு நாடுகளின் மாக்சியக் கட்சிகள் ஆழமான விளக்கத்தையும், செறிவான அனுபவத்தையும் முன்னெப்பொழுதுமல்லாத தரத்திற் கொண்டுள்ளன. இது அடிப்படையில் மாக்சிசம் பெருமளவில் வளர்ச்சியடைவதற்கு மிகவும் முக்கியமான நிபந்தனையாக அமைந்துள்ளது.

மாக்ஸ் ஒரு பெரும் புரட்சியாளன் மட்டுமல்ல ஒரு பெரும்விஞ்ஞானியும்கூட. விஞ்ஞானபூர்வமான கம்யூனிசத்தை ஸ்தாபிக்க அவருக்கு ஏதுவாக விளங்கியது அவர் மனிதசமுதாயத்தின் சிறந்த கலாச்சாரத்தையும் அறிவையும் தொழிலாள இயக்கத்துடன் ஒருங்கிணைத்தபோதாகும். ஜேர்மனிய பழைய தத்துவஞானம், ஆங்கிலேய பழைய அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிசம் ஆகிய மூன்று பிரதான சிந்தனைபோக்குகளை விமர்சன ரீதியிற் கிரகித்ததிலேயே மாக்சிசத்தின் தத்துவார்த்த தோற்றுவாய் தங்கியுள்ளதென லெனின் கூறினார் மாக்சின் அறிவு விலாசமானதும் நிபுணத்துவமானதுமாகும். மாக்ஸ் ஏராளமான நேர்மையான விஞ்ஞானிகளினதும், சிந்தனையாளர்களினதும், சரித்திராசிரியர்களினதும் மெச்சுதலைப் பெற்றார். பழைய உலகத்திற்கு வக்காலத்து வாங்குபவர்கள் அவரது கோட்பாட்டைக் ''காலங்கடந்தது'' என பதிவாக்க முயன்றபோதும் அவர்களது எண்ணம் ஈடேறவில்லை. சந்ததியின் சந்ததியாக வல்லுனர்கள், இளையதலை முறையினர் தொழிலாள இயக்கத்து செயல்வீரர்கள், தேசிய புரட்சியாளர்கள், மாற்றத்தை விரும்பும் ஏனைய மக்களும் மாக்சிசத்திலிருந்து குறைவில்லாத பலத்தையும், நம்பிக்கையையும் தொடர்ந்து பெற்றுவருகின்றார்கள். அவரின் வாழ்நாள் பூராகவும் வறுமையின் கோரப்பிடியில் சிக்கித்தவித்த போது ஏங்கெல்சின் உதவி ஓளவிற்கு தனிவை ஏற்படுத்தியது. அவரது பிள்ளைகளில் நால்வர் குழந்தைகளாய் இருந்தபோதோ அல்லது சிறு பராயத்திலோ இறந்துவிட்டனர். ஒரு பெண் குழந்தை இறந்தபோது ஒரு சிறிய சவப்பெட்டிவாங்குவதற்குக்கூட அவரிடம் பணம் இருக்கவில்லை. அவர்தனது சகதி அனைத்தையும் திறமையையும், விஞ்ஞான ஆராய்ச்சியையும் தொழிலாளவர்க்கத்திற்கும், முழு மனிதகுலத்திற்குமாக அர்ப்பணித்தார். மாக்ஸ் ஓர் உன்னதமான தொழிலாளவர்க்க புத்திஜீவியாவார்.

மாக்சின் மறைவிற்குப் பின் ஒரு முழுமையான நூறு வருடங்கள் கடந்துவிட்டன. ஆரம்பத்தில் ஐரோப்பாவை பயமுறுத்திய 'பூதம்' ஒரு மகத்தான சக்தியாக வளர்ந்து உலக சரித்திரத்தைப் பெருமளவில் மாற்றிவிட்டதுடன் தொடர்ந்தும் அப்படியே செய்யும் மாக்சிசத்தின் தோற்றத்திலிருந்தே உலகப் பாட்டாளிவர்க்கத்தின் ஐக்கியப்பட்ட போராட்டத்தின் திசைகாட்டியாகவும் உலகின் ஒடுக்கப்பட்ட தேசங்களின் அரசியல் பொருளாதார சுதந்திரத்திற்கு வழிகாட்டியாகவும் அது வளர்ந்து வந்துள்ளது. தற்போது முன்னேற்றப் பாதைக்கு பல தடைகள் உள்ள போதும் இந்த இரண்டு சக்திகளும் மாக்சின் காலத்தை விட ஓராயிரம் மடங்கு மிகவும் சக்தி வாய்ந்தவை. யுத்தத்தின் தோற்றுவாய் என்ன என்பதை விஞ்ஞானபூர்வமாக சுட்டிக்காட்டி அதை இல்லாதொழிப்பதற்கு ஒரே வழி காட்டுகின்றதாயும் மாக்சிசம் விளங்குகின்றது. இன்று மனித சமுதாயம் ஒருபெரும் எடுப்பிலான யுத்தத்தை எதிர்நோக்குகின்ற போதிலும் தொழிலாளவர்க்கம், ஒடுக்கப்பட்ட தேசங்கள், முழு முற்போக்கு மனித குலமும் பொதுப் போராட்டத்தின் மூலம் இறுதியில் இந்த இருளைப்போக்கி ஒளி ஏற்ற முடியும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

மாக்சும், எங்கெல்சும் முன்வைத்த மாபெரும் கம்யூனிச தத்துவம் உலக பாட்டாளிவர்க்கத்தையும். சகல ஒடுக்கப்பட்ட மக்கள் தேசங்கள் என்பனவற்றின் விடுதலைக்கான போராட்டத்தையும், ஒரு நல்ல எதிர்காலத்திற்காக முழு முற்போக்கு மனிதகுலத்திற்கும் உந்துதலை கொடுக்கிறது, இந்தப் போராட்டங்கள் யாவும் ஒன்றிணைந்து உலகம் தழுவிய, தடுத்து நிறுத்த முடியாதசரித்திர அலையாக உருவெடுத்து சமுதாய முன்னேற்றத்தை முன்தள்ளுகிறது.

மாக்சிசம் அழிவற்றது. மாக்சிசத்தின் மாபெரும் உண்மை எமது முன்னேற்றத்திற்கு என்றும் ஒளிபரப்புவதாக! ★

6-ம் பக்கத் தொடர்

வேவ்வேறு வேலைத்திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்ததனல் ஒருவரோடு ஒருவர் உரையாட நேரம் கிடைப்பது அரிது. ஆயினும் ஒருவருடைய விருப்பையும் அக்கறையையும் மற்றவர் நன்ருக அறிந்திருந்தனர். சௌ என்லாய் தமது காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு வந்தமரும்போதும், மதிய உணவு உண்ணும்போதும் டெங்யின்சௌ அருகில் வந்திருந்து ஒரு சில வார்த்தைகளைப் பேசுவார். அவரிடம் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவோ அல்லது ஆலோசனை பெறவோ வருகின்ற தோழர்கள் இந்த வாய்ப்பையும் கூடப் பறித்துக் கொள்வார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் டெங்யின்சௌ அவர் அருகிலிருந்து எவ்வித பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடாமல், புன்னகை மட்டுமே பூத்துக் கொண்டிருப்பார். வளவுக்குள் உலாவ எப்பொழுதாவது நேரங்கிடைத்தால் சௌஎன்லாய் டெய்யின்சௌவை அழைக்கத் தவறுவதில்லை. அவர் என்றுமே தமது பிறந்தநாளைக் கொண்டாடியதில்லை. ஆனல் தோழர்கள் நாளை அறிந்து, சிறப்பு உணவுகள் தயாரிக்க ஏற்பாடுகள் செய்வார்கள். டெங்யின்சௌ சிறிய 'நிகழ்ச்சிக'ளை ஏற்பாடு செய்வார். அல்லது மிகவும் நெருங்கிய நண்பர்கள் வீட்டிற்குச் செல்லவோ அல்லது அவர்களை வீட்டிற்கு அழைக்கவோ அல்லது கலைநிகழ்ச்சிகளுக்குச் செல்லவோ ஒழுங்கு செய்வார். இந்த எளிமையான பழக்கம் அவர்களுக்குப் பிற்காலத்தில் பெரிதும் ஆறுதலைத் தந்தது. (தொடரும்)

# தமிழர்கூட்டணியின் மன்னார் மாநாடு நடைபெறுமா?

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழக் கோரிக்கையைப் பிரகடனம் செய்து வட்டுக்கோட்டையில் தனது முதலாவது மாநாட்டை நடத்தியது. அடுத்து தமிழீழ எல்லைகளைப் பாதுகாக்கும் கொள்கையை வலியுறுத்தி ஆவரங்காலில் இரண்டாவது மாநாட்டை நடத்தியது. பல வருட இடைவெளிக்குப் பின் மூன்றாவது மாநாட்டை நடத்தப் போவதாகத் தலைமைப் பீடம் அறிவித்தது. முதலில் மட்டக்களப்பில் என்றவர்கள் இப்போது மன்னாரில் என்று கூறுகிறார்கள். ஆனால் மன்னாரில் மாநாடு திட்டமிட்டபடி நடக்குமா என்பது சந்தேகமாகவே உள்ளது. காரணம் எந்தக் கொள்கையின் அடிப்படையில் மாநாட்டை நடத்துவது என்பதிலும், இன்றைய நிலையில் எவ்வாறான கொள்கையை முன் வைப்பது என்பதிலும் கூட்டணியின் கொள்கை வகுப்போர் மத்தியில் குழப்பமான நிலை உருவாகி உள்ளதே.

அன்று தமிழ்ஈழக் கோரிக்கை முன் வைத்தவேளை யூ. என். பி ஆட்சி பீடத்தில் இருக்கவில்லை. தேர்தலும் வர இருந்தது. கூட்டணியினர் உச்சிக்கொப்பில் நின்று உரத்துப்பேசினர். இப்போது அப்படிப் பேசுவது முடியாத காரியமாகிவிட்டது. தமது நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமான ஜே. ஆரையும் யூ. என் பியை பகைக்காமலும், தமிழ் மக்கள் தங்களை நிராகரிக்கும் வேகத்தைக் கூட்டாமலும் இருக்கக்கூடியதான ஒரு கொள்கையைக் கண்டு பிடித்து அதை மாநாட்டில் வெளியிடவே கூட்டணித் தலைமை விரும்புகிறது. எப்படி அதை ஆக்குவது என்பதில் திண்டாட்ட நிலையே நிலவுகிறது.

ஆட்சியினரை ஆத்திரப்படுத்தாத அமெரிக்க சார்பு கொள்கையைத் தான் அமிர்—நீலன் போன்றோர் வற்புறுத்துகின்றனர், அதை எப்படி ஏனையோரை ஏற்றுக்கொள்ளச் செய்வது என்பதில் அவர்களுக்கே தலையிடியாக உள்ளது. இதே வேளை ஒரு சில கூட்டணி எம். பீக்கள் அரசுடன் ஒட்டி உறவாடுவதை விரும்பவில்லை. சிலரோ ஒரு பிரச்சினையும் இல்லாது ஒதுங்கி விடவேண்டும் என்ற நிலைக்கும் வந்துள்ளனர்.

இதேவேளை கூட்டணியின் கீழ் மட்ட சக்திகளின் மத்தியில் அதிருப்தியும் விரக்தியும் குடிகொண்டுள்ளது. கூட்டணியை ஒரு விடுதலை இயக்கமாகவும், லட்சியத்தை வென்றெடுக்கும் தமிழர் கட்சியாகவும் நம்பிய சாதாரண ஆதரவாளர்கள் இன்று

## கொள்கை வகுப்பதில் திண்டாட்டம்

அதன் பொய்மைத் தோற்றத்தைக் நன்கு உணர்ந்துள்ளனர், இந்நிலையில் மாநாட்டைநடத்துவது சாத்தியமில்லை என்பதே தலைமையின் கருத்தாகும். அதே நேரம் மாநாடு என்ற ஒரு கண்துடைப்பைச் செய்யாமலும் அவர்களால் இருக்க முடியவில்லை.

தமிழர் கூட்டணி இன்றுள்ள அவலநிலைக்கு ஒரு நாள் வந்தே தீரும் என நாம் அதன் ஆரம்ப நாட்களில் சுட்டிக் காட்டியது இன்று நடைபெறுகிறது, போலித்தனமான கொள்கையை தேர்தல் வெற்றிக்காக பாவித்த கூட்டணித்தலைமை தனது உயர் வர்க்கம் சார்ந்த நிலைப்பாட்டாலும் நடைமுறையாலும் தன்னைத் தானே அம்பலமாக்கியுள்ளது. இதை மூடி மறைத்து எப்படியும் தமிழ்மக்களை தொடர்ந்தும் ஏமாற்றி தமது உயர்வர்க்க அரசியலை நடாத்த அமிரும் அவரது சகாக்களும் முயன்ற போதிலும் அவை எவ்வித பலாபலனையும் கொடுக்கவில்லை. ஒற்றுமை ஒற்றுமை என்று இப்பொழுது வைத்துவரும் ஒப்பாரியை எதற்கு ஒற்றுமை என்று தமிழ்மக்கள் கேட்கிறார்கள். நாம் ஒற்றுமையாகத்தானே 77ல் உங்களைச் சகல இடங்களிலும் தெரிவு செய்தோம் நீங்கள் இதுவரை எதைச் சாதித்தீர்கள். யூ. என். பியோடு ஒட்டி உறவாடி தமிழ் மக்களை என்றுமில்லா நிலைக்கு நிர்க்கதியாக்கினீர்களே என்று மக்கள் திருப்பிக் கேட்கும் இன்றைய நிலையில் அமிர் கூட்டத்தால் ஒன்றுமே பேச முடியாத நிலை உருவாகி உள்ளது.

இவ் இக்கட்டான நிலையில் மன்னார் மாநாடு நடைபெறுவது சாத்தியம் இல்லை என்றே கூட்டணிவட்டாரங்களில் பேசப்படுகிறது. புதிய ஏமாற்றுக் கொள்கை வகுக்கமுடியாததாலும், மக்களிடம் ஆதரவு குன்றிய நிலையில், கீழ்மட்ட கூட்டணி உறுப்பினர் மத்தியில் அதிருப்தி நிலவுவதாலும் மன்னார் மாநாட்டைகாலவரையின்றி ஒத்திவைக்கப்படும் நிலைக்கு கூட்டணித்தலைமை தள்ளப்பட்டுள்ளது.

## தேர்தல் பகிஷ்கரிப்பு—பற்றிய ஒரு கணிப்பு
### தமிழர்பிரச்சினை

தெற்கில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றம் பாராளுமன்ற இடைத் தேர்தல்களின் பெருவாரியான முடிவுகள், மக்களது எதிர்பார்ப்புகட்குப் பாதகமாக அமைந்தது நாம் எதிர்பார்த்ததொன்று தான். அது. எதிராளியின் செல்வாக்கால் அல்லாமல், வஞ்சனையாலும் ஏமாற்றாலுமே ஏற்பட்டது என்பது உண்மையென்றாலும் இதற்காக எதிரியின் பலத்தைக் குறைத்து மதிப்பிடக்கூடாது.

அரசு இயந்திரம், ஆள்மாராட்டம், சண்டித்தனம், பண முதலைகளது ஆதரவு என்பன ஒருபுறம் விஸ்வ ரூபத்தில் செயல்பட, மறுபுறம் நாட்டிலுள்ள குழப்பமான நிலை எதிரிக்குச் சாதகமாக அமைந்துவிட்டது.

தேர்தல்கள் பற்றிய பிரமைகளைக் கலைப்பதற்காகச் செயற்படும் காலம் இப்பொழுது நெருங்கி வருகிறது. தேசிய ஜனநாயக சக்திகளின் தலைமையைத் தெளிவாக உணரும் நிலையில் மட்டுமே இதனை இன்றைய சூழலில் பரந்து பட்ட அளவில் செயற்படுத்த முடியும். ஆயினும் தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது எவ்வாறு செயற்படுத்தப்பட வேண்டுமென்ற விஷயம் கவனமாகச் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று.

பகிஷ்கரிப்பு ஒரு ஆக்கபூர்வமான அரசியல் நடவடிக்கையாக அமைய வேண்டும். அது திட்டமிட்ட ஒருசெயலாகவும் அமைய வேண்டும். அதாவது பரந்துபட்ட யூ. என். பி. விரோத ஐக்கியத்தின் அடிப்படையில் அமைவதுடன் பொதுவான அரசியல் வேலைத்திட்டத்தின் ஒரு அம்சமாகவும் அமைதல் வேண்டும்.

முதலாவது கட்டமாக, சகல நேர்மையான யூ. என் பி. விரோத சக்திகளும் சமகால நிலையை உணர்ந்து ஒரு பொதுவான குறிக்கோளுக்கு இணங்க பொது வேலைத்திட்டம் ஒன்றை முன்வைத்து ஒன்றுபட வேண்டும். அதன்கீழ் வகுக்க வேண்டிய காரியங்களை, சூழ்நிலைகளை ஒட்டித் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும். அவ்வாறில்லாமல் வெறுமனே பகிஷ்கரிப்புக் கோஷம் எழுப்புவது அர்த்தமற்ற காரியம்.

எதிரியின் பலம்பற்றி அசட்டையாக இருப்பது போல தவறு எதுவும் இருக்க முடியாது. இனத்துவேஷம், முற்போக்கு — தேசபக்த சக்திகளிடையே ஒற்றுமையின்மை என்பன இன்று எதிரியின் பலமான ஆயுதங்கள். எனவே முதலில் எதிரியை 'நிராயுதபாணி' யாக்கி எதிரியையும் எதிரியின் ஏவலாட்களையும் தனிமைப் படுத்துவது நம் முக்கிய பணிகளில் ஒன்றாகிறது. இதனை எதிரணி ஜனநாயக சக்திகள் கவனத்தில் எடுத்துச் செயல்படுத்த வேண்டும்.

வடக்கில் தேர்தலுக்கு முன் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கும் வேட்பாளர்கள் வாபஸ் வாங்கியதற்கும் சம்பந்தம் இல்லையென்று சொல்லமுடியாது; தேர்தலன்று வாக்குச்சாவடியில் நடந்த வன்முறை அவசியம் தானா? யாழ்ப்பாணத்தை எரித்து விடுவதற்காக அனுமான் அவதாரம் எடுத்தவர்கட்கு அது ஒரு வசதியான சாட்டாகி விட்டது.

அரசாங்கமும் ஆயுதப்படைகளும் ஒருபுறம் மிரட்டவும், மறுபுறம் ''தமிழீழ விடுதலைக்காக'' செயல்களில் ஈடுபடுவோர் தம் முட் போட்டி போட்டுக்கொண்டு பீதி ஏற்படுத்தவும், நடுவே பொதுமக்கள் அகப்பட்டுக் கொண்டு திணறுகின்ற நிலை மகிழ்ச்சிக்குரிய ஒன்றல்ல. பகிஷ்கரிப்புக்கு பிரசாரகர்கட்கு பொதுமக்கள் மீது நம்பிக்கை இருந்தால் பொதுமக்களை மிரட்டும் வகையிலான காரியங்களில் இறங்காமலிருப்பது அவசியம்.

மிரட்டல் ஏதும் இல்லாமலே வாக்களிப்பு வீதம் நூற்றுக்கு இருபது இருபத்தைந்தாக இருந்திருந்தாலும்கூட, அது தமிழர் கூட்டணியினதும் அரசாங்கத்தினதும் முகத்திற் கரி பூசியதாகவே இருந்திருக்கும். இதனைப் பகிஷ்கரிப்பு பிரசாரகர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நாளேடுகளில் இப்போது அடிக்கடி வெளிவரும் செய்தி— தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் மென்பது தான். காலத்துக்குக் காலம் எழுப்பப்படும் கோஷம் இது.

இன்று ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் யூ. என். பி. 1977-ல் பொதுத் தேர்தலில் நின்றபோது தமிழர் பிரச்சினை குறித்து அதிகம் பேசியது மட்டுமன்றி, தேர்தல் விஞ்ஞாபனத்திலும் ஏதேதோ எல்லாம் குறிப்பிட்டிருந்தது. அதே யூ. என், பி. ஆட்சியில் நடந்திருப்பதும் இன்று நடப்பதும் அப்பாவித் தமிழ் இளைஞர்களை 'பயங்கரவாத' சிறையில் சித்திரவதை செய்வதுதான்!

அரசியல் தீர்வு காணப்பட வேண்டு மென்பதை சர்வகட்சிகளும் தேசப்பற்று மிக்க பிரமுகர்களும் மட்டுமன்றி ஆட்சியிலுள்ள அமைச்சர்களும் வரவேற்றுள்ளனர். இதற்கான காலமும் மிக நெருக்கமாகவந்து விட்டது. ஆகவே சர்வ கட்சிகளையும் தேசப் பற்றுமிக்க பிரமுகர்களையும் அழைத்து, வட்டமேசை மகாநாட்டைக் கூட்டி, தமிழ் மக்களின் பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து அரசியல் தீர்வு காண அரசு முன்வரவேண்டும். இதனை விடுத்து, 'பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை' என்ற போக்கு இருக்குமானால் நாட்டில் நிரந்தர அமைதியின்மை நாட்டத் தவறிய விளைவுக்கும் அரசே பொறுப்பேற்க வேண்டும்.

நன்றி: தாயகம்

1-ம் பக்கத் தொடர்

### திருகோணமலைச்

கீழ் ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ளவேளையிலேயே தலைவிரித்தாடியுள்ளது. ஆயுதப் படைகளின் ஒத்துழைப்பு இன்றி இவ்வாறான சந்தர்ப்பத்தில் எவராலும் எந்த வெறியாட்டத்தையும் ஆடமுடியாது. இதுபற்றி தார்மீகம் போதிக்கும் யூ. என். பி அரசு என்ன கூறப்போகிறது. எமக்கும் அவற்றுக்கும் சம்மந்தம் இல்லை என்று கூறப்போகிறதா? அல்லது அவற்றை ஒரு பெரிய விடயமாகக்கொள்ளாது தட்டிக் கழித்து விடப்போகின்றதா?

யூ. என். பி ஆட்சி இனவாதத்தையும் இனவாத வன்செயல்களையும் வருடாந்த மாதாந்த விழாக்களாகப் பிரகடனப் படுத்திவிட்டார்கள். இதை வைத்தே தமது ஆட்சிச் சக்கரத்தை உருட்ட முடியும் என்ற முடிவுக்கும் வந்துள்ளனர். இத்தகைய நிலைக்கு தமிழ்த் தலைவர்களின் பங்களிப்பும் கணிசமானதேயாகும். "அவர்கள் இன்றும் கூட யூ. என் பியின் உண்மைத் தோற்றத்தைக் காண மறுக்கின்றனர். அதே வேளை சாதாரண தமிழ் மக்கள் இன்று கடந்த காலத் தவறான கொள்கைகள், கோஷங்களில் இருந்து விடுபட்டு நிதானமாக முன்செல்ல வேண்டும் என விரும்புகின்றனர். முழு நாட்டினதும் தேசிய, ஜனநாயக, தேசபக்த, முற்போக்கு சக்திகள் யூ. என். பியை தெளிவாக இனம் கண்டுள்ளதுபோல் தமிழ் மக்களும் இனங்கண்டு அவ்வாறான சக்திகளோடு இணைந்து முன் செல்ல முன்வரல் வேண்டும். அதுவே திட்டமிட்ட ரீதியில் திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவங்கள் மீண்டும் ஏற்படாது இருக்க சரியான உத்தரவாதமாக இருக்கமுடியும். சாதாரண சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களது தேசம் பரந்த ஐக்கியம் யூ. என். பிக்கு எதிரான நிலைப்பாட்டில் உருவாக்கப்படல் வேண்டும். அதன் மூலம் யூ. என. பி. தோற்கடிக்கப்பட்டால் மாத்திரமே இனவாத வன்செயல்களுக்கு உண்மையான முற்றுப் புள்ளி வைக்கமுடியும். இதை உணர்ந்து நிதானமாகச் சிந்தித்து செயல்பட வேண்டியது சகல மக்களினதும் பொறுப்பாகும்.

7-ம் பக்கத் தொடர்

ளது. இந்நிலையை எதிர்ப்பதற்கு அத் தோட்டத் தொழிலாளர்கள் தயாராகி வருகின்றனர். அதாவது தோட்டத்தை விடுவதற்கு 5000 ரூபாவும், வேறு தோட்டத்தில் வேலை பெற்றுக் கொடுப்பது, போக்குவரத்துச் செலவை நிர்வாகமே பொறுப்பேற்பது, போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். இவை நிறைவேற்றப் படாது விட்டால் தோட்டத்தை விட்டுப் போவதில்லை என்றும் தொழிலாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

சம்பள உயர்வு இல்லாமையாலும் வரட்சியினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களை ''அபிவிருத்தியின்'' பெயரால் தோட்டங்களை விட்டே துரத்தும் அரசின் நயவஞ்சகத் திட்டத்தைதடுத்து நிறுத்த சகல தொழிற்சங்கங்களும் ஏனைய ஸ்தாபனங்களும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

1-ம் பக்கத் தொடர்

பட்சமின்றி ஏனைய சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் உயர் பதவிகளில் உள்ள கௌரவமான மனிதர்களுக்கும் கூடப் பாவித்திருக்க வேண்டும்.

அரசு தனது கருத்துக்களை அரசு தொடர்பு சாதனங்களின் மூலம் வலியுறுத்தி வரும் அதே வேளை மாற்றுக் கருத்துக்களை தடைசெய்ய முயல்வது ஜனநாயகமாகாது.

அதேபோல் 'சற்றடேறிவியூ' என்ற ஆங்கில வாரப்பத்திரிகை இனவாதத்தை தூண்டக்கூடிய செய்திகளைக் கொண்டிருந்த காரணத்திற்காகவே தடைசெய்யப்பட்டுள்ளதாக அரசு காரணம் கூறுகின்றது. அதுதான் உண்மையானால் தேசியப் பத்திரிகைகள் என்ற கௌரவமான பெயரில் வெளிவரும் ஆங்கில சிங்களத் தினசரிகளும் அல்லவா தடைக்கு உள்ளாகி இருந்திருக்கவேண்டும்.

அரசு தன் சுயலாபத்திற்கு ஒன்றை அனுமதிப்பதும், தன்னை அம்பலமாக்குவதற்காக மற்றொன்றைத் தடைசெய்வதும் ஜனநாயகம் என்று மக்களை ஏற்கும்படி நிர்ப்பந்திக்க முயலுகிறது. ஆதலால் அரசின் இவ்விரு பத்திரிகைகளுக்கான தடையையும், டாக்டர் தருமலிங்கம், கோவை மகேசன் இருவரினதும் தடுப்புக்காவலையும் ஜனநாயக மீறல் செயல்கள் என்றவகையில் நாம் கண்டிக்கின்றோம். எனவே தடையை நீக்கி தடுப்புக்காவலை ரத்து செய்யுமாறு கோருகின்றோம்.

விற்பனையாகிறது!

தாயகம் ★

(இரண்டாவது இதழ்)

தொடர்பு:
க. தணிகாசலம்
15/1 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு யாழ்ப்பாண அச்சகம், 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு: சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.